விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

MoneyGram
Ria
WESTERN UNION WU
Moving Money for better
உறவுகளிடமிருந்து
Western Union,
MoneyGram, Ria மூலம்
அனுப்பிய பணத்தை
ஒரு சில நிமிடங்களில்
நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு
துரித தபால்கள்
பொதிகள் சேவை
உடனுக்குடன்
அனுப்ப...
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-2320)

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 30 புதன்கிழமை (14.07.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 207

## வவுனியா பல்கலையின் முதலாவது துணைவேந்தராக

### கலாநிதி மங்களேஸ்வரன் நியமனம்



(வவுனியா)

வவுனியா பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராக, யாழ்ப்பாண பல்கலைக்கழக வவுனியா 19

வடக்கு மக்களின் மனங்களை நன்கறிவேன்

## சட்டம், ஒழுங்கை நடைமுறைப்படுத்தி மக்களுக்கு உயரிய சேவையாற்றுவேன்

வட மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் சட்டம் ஒழுங்கை முறையாக நடைமுறைப்படுத்தி மக்களுக்கு உயரிய சேவையை வழங்குவேன் என புதிதாக தெரிவு செய்யப்பட்ட 19

## போராட்டங்கள் செய்பவர்களை

# ஒடுக்குவது எனது அணுகுமுறையல்ல

## சிங்கள நாளிதழுக்கு ஜனாதிபதி கோட்டா செவ்வி



*(கொழும்பு)* போராட்டங்களை ஒடுக்குவது எனது அணுகுமுறை கிடையாது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வீதியில் இறங்கி போராட்டங்கள் செய்பவர்களை கைது செய்வதானது அவர்களை ஒடுக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

*(19ஆம் பக்கம் பார்க்க)*

## கோவிட் +1,404

(கொழும்பு)

நாட்டில் மேலும் 1,404 கோவிட் தொற்றாளர்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. 19

## கொரோனா 41 பேர் மரணம்

(கொழும்பு)

நாட்டில் கொரோனாத் தொற்றால் 19

## புலிகளை ஆதரிக்கும் ஊடகங்களுக்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளை ஆத 19

முல்லை புதுக்குடியிருப்பில்

## 200 கிலோ எடையுடைய ஆட்லரி ஷெல் மீட்பு



(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் சுமார் 200 கிலோகிராம் எடையுடைய ஆட்லரி ஷெல் நேற்றைய தினம் 19

தென்மராட்சி மீசாலை பகுதியில்

## வர்த்தக நிலைய உரிமையாளர் மீது வாள்வெட்டுத் தாக்குதல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி - மீசாலை ஐயா கடைப் பகுதியில் வர்த்தக நிலைய உரிமையாளர் மீது வாள்வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணியளவில் தனது வர்த்தக நிலையத்திற்கு முன்பாக நின்ற உரிமையாளர் மீது இனந்தெரியாத 19

வடக்கு ஆளுநர் பதவியில் மாற்றம்?

## பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்படும் சாத்தியம்

(கொழும்பு)

வடமாகாண ஆளுநராக மீண்டும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்படவுள்ளதாக கொழும்பு உயர் மட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தகவல்கள் வெளியாகியுள்ளன.

வடக்கில் முக்கிய பதவிகளில் மாற்றங்கள் இடம்பெறவுள்ளதாக அண்மைய நாட்களில் தகவல்கள் வெளியாகி 19

## யாழில் 6 ஆயிரத்தை கடந்த கோவிட் தொற்று

### 107 பேர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை ஆறாயிரத்து 15 ஆக அதிகரித்துள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார். 19

புலமைப்பரிசில், க.பொ.த (உ/த)

## பரீட்சைகள் தொடர்பில் அடுத்த வாரம் தீர்மானம்

### கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தர மற்றும் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைகள் தொடர்பில் அடுத்த வாரம் தீர்மானிக்கப் 19

## அமெரிக்க தூதுவருடன் கூட்டமைப்பு நாளை சந்திப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கும், இலங்கைக்கான அமெரிக்க தூதுவருக்கும் இடையிலான சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது.

இச்சந்திப்பு நாளை வியாழக்கிழமை, காலை 10 மணிக்கு கொழும்பிலுள்ள இரா.சம்பந்தனின் இல்லத்தில் இடம்பெறும்.

அமெரிக்க தூதரே 19

தேசிய பாதுகாப்புக்கு

## ராஜபக்ஷவினரால் அச்சுறுத்தல்

### அனுரகுமார

(கொழும்பு)

"ராஜபக்ஷ குடும்பத்தினரின் தீர்மானங்களினால் நாட்டின் தேசிய 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கைக்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமை
# மேலும் 1.5 மில்லியன் மொடர்னா தடுப்பூசிகள்

(கொழும்பு)

இலங்கைக்கு மேலும் 1.5 மில்லியன் மொடர்னா தடுப்பூசிகள் கிடைக்கவுள் ளதாக தெரிவிக்கப்படுகிறது.




கொவெக்ஸ் திட்டத்தின்கீழ் குறித்த தடுப்பூசிகள் இலங்கைக்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கிடைக்கவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

கொவெக்ஸ் திட்டத்தின்கீழ் அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படும் மொடர்னா தடுப்பூசிகளின் ஒரு மில்லியன் டோஸ்களை இலங்கைக்கு பெற்றுக் கொடுக்க கடந்ததினம் உலக சுகாதார அமைப்பு அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-03)

### அரச ஊழியர்களின் நேர்மையான செயற்பாடுகளுக்கு
# பாதுகாப்பளிக்கும் சட்டமூலம் குறித்து மகிந்த தலைமையில் ஆராய்வு

(கொழும்பு)

அரச ஊழியர்களினால் கடமைகள் நிறை வேற்றப்படும் போது நேர்மையுடன் முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு அமைய அந்த ஊழி யர்களுக்கு உரிய பாதுகாப்பளிக்கும் வகையில் சட்ட வரைவுகளை மேற்கொள்ளுமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ச ஆலோசனை வழங்கியுள்ளார்.

அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்பட்ட அரச மற்றும் அரை அரச ஊழியர்களுக்கு நிவாரணம் அளிப்பது தொடர்பில் அலரி மாளிகையில் நேற்று முற்பகல் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அதற்கமைய தொடர்புடைய சட்ட வரைவுகளை தயாரிப்பதற்கு ஆதரவளிக்குமுகமாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் உள்ளிட்ட குழு நியமிக்கப்பட்டு அப்பரிந்துரைகளை ஒரு மாதக் காலப்பகுதிக்குள் வழங்குமாறு பிரதமர் பணித்தார்.

(ம-03)


# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர்
**சி. ஜெகதீபன்** அவர்களின்
அன்புத் தந்தையார்
அமரர்
## நடராசா சிவபுத்திரன்

தோற்றம் : 21.08.1943
மறைவு : 03.07.2021

அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை
தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-2344)

ஆசிரிய சகோதரத்துவம்
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி


# உயர்தரம், புலமைப்பரிசில் பரீட்சைகளை ஒத்தி வையுங்கள்
### அரசிடம் சஜித் கோரிக்கை

கல்விப் பொதுத் தராதர உயர்தரம் மற்றும் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைகள் என்பனவற்றை ஒத்திவைக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரியுள்ளார்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 3ஆம் திகதி புலமைப் பரிசில் பரீட்சையும், 4ஆம் திகதி தொடக்கம் உயர்தரப் பரீட்சையும் நடத்தப்பட முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது. பின்னர் குறித்த பரீட்சைதொடர்பில் அடுத்தவாரம் தீர்மானிப்பதாக ஜீ.எல் பீரிஸ் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் குறித்த பரீட்சைகளை ஒத்தி வைக்குமாறு சஜித்பிரேமதாச அரசாங்கத்திடம் கோரியுள்ளார். கோவிட் காரணமாக கற்பிக்கப்படாத பாடங்களை கற்பிப்பதற்கு வாய்ப்பு அளித்து அதன்பின்னர் பரீட்சை நடத்தப்பட வேண்டுமென கோரியுள்ளார்.(ம-3)


## வீடு வாடகைக்கு

கண்டி வீதி, சாவகச்சேரி A9 வீதியில் மொடன் வைத்திய சாலைக்கு முன்பாக சாவகச்சேரி செல்லும் பக்கம் 3 ஆவது வீடு 5 அறைகள், 3 கோல்கள், சமயலறை மற்றும் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
(வாகனத் தரிப்பிட வசதி உண்டு.)

பார்வையிடும் நேரம் : காலை 9 மணி முதல் - மாலை 3 மணி வரை

(7207)

தொடர்பு
M. செல்வரெட்ணம்
077 255 6691
021 221 3590


# மரண அறிவித்தல்



## சின்னையா மணிவண்ணன்

**தோற்றம் : 24.02.1973 மறைவு : 11.07.2021**

தம்பலடி பொலிகண்டி கிழக்கு வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் தெஹிவளை கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா மணிவண்ணன் கடந்த (11.07.2021) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா (ஓய்வுபெற்ற பிரதம இலிகிதர் - பிரதேச செயலகம், பருத்தித்துறை) - செல்வமலர் தம்பதிகளின் அன்பு மகனும் கௌரியின் அன்புக் கணவரும் இன்பமலர் (ஆசிரியை - யா/ வல்வை சிவகுரு), மதிவதனி (சுவிஸ்), சிவச்செல்வி (விரிவுரையாளர்- வாழ்க்கை தொழில்சார் தொழில்நுட்பவியல் கல்லூரி, இரத்மலானை) , மயூரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பா. சிறிகுமரபரன் (ஆசிரியர் - யா/ கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலை), பகீரதன் (சுவிஸ்), உருத்திரன் (விரிவுரையாளர் - வாழ்க்கை தொழில்சார் தொழில்நுட்பவியல் கல்லூரி), தாரணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் கிருத்திகா (HNB Head office), செந்தூரன், நவீனன் (சுவிஸ்), மதீனன் (சுவிஸ்), சங்கவி, ஸ்ரீராம் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் மதுவந்தியின் (லண்டன்) அன்புப் பெரியப்பாவும் காலஞ்சென்ற கந்தசாமி, இராசமலர், ரூபசௌந்தரி ஆகியோரின் பெறா மகனும் காலஞ்சென்ற செல்லம், குலேந்திரராசா (சுவிஸ்) ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.07.2021) புதன்கிழமை காலை 10.30 மணியளவில் அன்னாரின் பொலிகண்டி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஊறணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-2348)

பொலிகண்டி கிழக்கு,
வல்வெட்டித்துறை.


077 406 5556
077 6717393
071 491 0462

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நாடுகளுடன் இணங்கிச் செயற்பட்டிருந்தால் பிரபாகரன் பெரும் சக்தியாக விளங்கியிருப்பார்

## தமிழக மருத்துவர் கந்தராஜ்



(கொழும்பு)

**விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் ஈழத்தை தனிநாடாகப் பிரகடனப்படுத்தினார். இதன் ஆபத்தைப் புதிந்து கொண்ட சீனாவும் அமெரிக்காவும் விடுதலைப் புலிகள் அமைப்பை அழிக்க ஒத்துழைப்பு வழங்கின. அந்த நாடுகளுடன் இணங்கிச் செயற்பட்டிருந்தால் இன்று உலகப் போக்கை தீர்மானிக்கும் தலைவர்களில் ஒருவராக பிரபாகரன் இருந்திருப்பார் என தமிழகத் தைச் சேர்ந்த வைத்தியர் கந்தராஜ தெரிவித்தார்.**

இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனை கூறியுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

விடுதலைப் புலிகளின் போராட்டம் சாதாரணமான ஒன்றல்ல, அது உலகப் போருக்கு நிகரான ஒன்று.

நேரடித்தாக்குதல் ஒன்றினை மேற்கொண்டிருந்தால் விடுதலைப் புலிகளையும் அதன் தலைவர் பிரபாகரனையும் அழித்திருக்க முடியாது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தொழில்நுட்பம் மிகவும் வலிமையானது. அவ்வாறான அமைப்பை அழிப்பதென்பது சாதாரணமான ஒன்றாக இருந்திருக்காது. காட்டிக்கொடுக்கப்பட்மையே விடுதலைப் புலிகளின் தோல்விக்குக் காரணம் எனக்கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் தமிழ் ஈழத்தினை தனிநாடாக பிரகடனப்படுத்திக்கொண்டார்.

இதன் ஆபத்தை புரிந்து கொண்ட சீனாவும் - அமெரிக்காவும் விடுதலைப் புலிகள் அமைப்பை அழிக்க ஒத்துழைப்பு வழங்கியன.

எனினும், இந்த நாடுகளுடன் இணங்கி செயற்பட்டிருந்தால், இன்று உலகப் போக்கை தீர்மானிக்கின்ற தலைவர்களில் ஒருவராக பிரபாகரன் இருந்திருப்பார்" என அவர் மேலும் தெரிவித்தார்.

(நி-5)

# டெல்டா தொற்றாளர்களது எண்ணிக்கை 24 ஆக அதிகரிப்பு - சுகாதார அமைச்சு

(கொழும்பு)

இலங்கையில் மேலும் 6 பேருக்கு டெல்டா கொரோனா பிறழ்வு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்தார்.

இதன்படி நாட்டில் இது வரை 24 டெல்டா நோயாளர்கள் அடையாளம் காணப் பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு பொதுமக்கள் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

(நி-5)

# இணையவழி கற்றல் நடவடிக்கையில் இருந்து ஆசிரியர்கள் விலகியுள்ளமை மோசமான செயற்பாடாகும்

## கெஹலிய ரம்புக்வெல

(கொழும்பு)

கொத்தலாவல பல்கலைக் கழக சட்டமூலத்திற்கு எதிராக பாராளுமன்ற சுற்று வட்டத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தனிமைப் படுத்தல் சட்டத்தை மீறியதால் கைது செய்யப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

இவ்விடயத்தில் எவ்வித அரசியல் தலையீடுகளும் கிடையாது.

இக்காரணிகளை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர்கள். இணைய வழிக் கல்வி நடவடிக்கைகளில் இருந்து விலகியுள்ளமை படுமோ சமான செயற்பாடாகவே கருத வேண்டும்.

கோரிக்கைகயை நிறைவேற்றிக் கொள்வதற்கு 43 இலட்சம் மாணவர்களை பகடையாக வைப்பது எந்தளவிற்கு நியாயமாகும் என்பதை நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும் என அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக் களத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத் துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். கொவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் கல்வித் துறைக்கு பாரிய சவால் ஏற்பட்டுள்ளது.

மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை மேம்படுத்த பிரத்தியேக தொலைக் காட்சி அலைவரி சைகளை உருவாக்கத் தீர்மானிக் கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

(நி-5)

# மாகாணசபைத் தேர்தலில் துமிந்த?

(கொழும்பு)

ஜனாதிபதி பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, குறுகியதொரு ஓய்வு காலத்தின் பின்னர் மீண்டும் செயற்பாட்டு அரசியல் நடவடிக்கையில் இறங்குவார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் துமிந்த சில்வாவுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

எனினும், அவர் சிறைக்குச் சென்று சுமார் நான்கரை வருடங்களுக்குள் ஜனாதிபதி பொதுமன்னிப்பின் கீழ் கடந்த மாதம் 24 ஆம் திகதி விடுதலையானார்.

தனிமைப்படுத்தல் காலம் முடிவடைந்த பின்னர், சிறிதுகால ஓய்வின் பின்னர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை நேற்று முன்தினம் அவர் சந்தித்தார்.

சிறைக்குச் செல்ல முன்னர் துமிந்த சில்வா அரசியல் செயற்பாட்டில் பங்கேற்றிருந்தார்.

தற்போது மொட்டு கட்சி ஊடாகவே அவரின் அரசியல் செயற்பாடு இடம்பெறும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

மாகாண சபைத் தேர்தலொன்று நடை பெறும் பட்சத்தில் முக்கிய பதவியில் துமிந்த சில்வா போட்டியிடக்கூடும் எனவும் சில சிங்கள் இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

(நி-5)




இலங்கைக்கு மேலும் ஒரு தொகை சினோபார்ம் தடுப்பூசிகள் நேற்று கிடைக்கப்பெற்றுள்ளன. இதேவேளை கடந்த ஞாயிற்றுக்கிழமை 20 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யூரோ கனவு அணி
# ரொனால்டோவுக்கு இடமில்லை

யூரோ கனவு அணியில் ரொனால்டோவுக்கு இடம் கிடைக்கவில்லை.

ஐரோப்பிய அணிகளுக்கு இடையிலான யூரோ கிண்ணத் தொடர் நடந்தது.

இத்தாலி அணி இங்கிலாந்தை வீழ்த்தி கிண்ணம் வென்றது.

இத்தொடரில் அதிக கோல் அடித்த வீரர்களில் 'நம்பர் 1' இடம் பெற்றார் போர்த்துக்கல் அணியின் தலைவர் ரொனால்டோ.

இதனிடையே ஐரோப்பிய கால் பந்து கூட்டமைப்பு சார்பில் தொடரின் 'கனவு' அணி தேர்வு செய்யப்பட்டது.

இதில் ஐந்து இத்தாலி வீரர்கள் இடம் பெற்றனர். 'கோல்டன் பூட்' விருது வென்ற ரொனால்டோவுக்கு இதில் இடம் இல்லை.

தவிர எம்பாப்வே (பிரான்ஸ்), லெவண்டோவ்ஸ்கியும் (போலந்து) சேர்க்கப்படவில்லை. இங்கிலாந்து வீரர்கள் வோக்கர், மாகுயரே சேர்க்கப்பட்ட நிலையில் நான்கு கோல் அடித்த அணித் தலைவர் ஹரி கேன் புறக்கணிக்கப்பட்டார்.

இத்தாலி அணியில் இருந்து கோல் கீப்பர் கியான்லுகி, பொனுாச்சி, லியானார்டோ, ஜோரினோ உட்பட 5 பேர் இடம் பெற்றனர்.

**அணி விபரம்:**


கோல் கீப்பர்: கியான்லுகி (இத்யதாலி)

பின்கள வீரர்கள்: வோக்கர், மாகுயரே (இங்கிலாந்து), பொனுாச்சி, லியனார்டோ (இத்தாலி).

மத்திய கள வீரர்கள்: பியர்ரே (டென்மார்க்), ஜோரினோ (இத்தாலி), பெட்ரி (ஸ்பெயின்).

முன்கள வீரர்கள்: சியசா (இத்தாலி), லூகாகு (பெல்ஜியம்), ஸ்டெர்லிங் (இங்கிலாந்து).

# ஹெய்ல் சிக்சர் மழை
## மீண்டும் மே.தீவுகளிடம் அடி வாங்கும் ஆஸி



ஹெய்ல் விளாசல் கைகொடுக்க, மூன்றாவது 'ரி20' போட்டியில் மே.தீவுகள் அணி 6 விக்கெட்டில் வெற்றி பெற்றது. தொடரை 3-0 என கைப்பற்றியது.

மே.தீவுகள் சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி, ஐந்து போட்டிகள் கொண்ட 'ரி20' தொடரில் பங்கேற்கிறது.

முதல் இரு போட்டியில் வென்ற மே.தீவுகள் 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

மூன்றாவது போட்டி கிராஸ் ஐலட்டில் நடந்தது. 'டாஸ்' வென்ற அவுஸ்திரேலிய அணித் தலைவர் பின்ச், களத்தடுப்பை தேர்வு செய்தார்.

ஆஸி அணிக்கு வேட் (23), ஆரோன் பின்ச் (30) ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. 'மிடில் ' ஓடரில்' மிட்சல் மார்ஷ் (9), அலெக்ஸ் கேரி (13) ஏமாற்றம் கொடுத்தனர்.

பின் வரிசையில் ஹென் ரிக்ஸ் (33), டேர்னர் (24) சற்று கைகொடுக்க அவுஸ்திரேலிய அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 141 ஓட்டங்களை எடுத்தது.

**கெய்ல் அபாரம்**

எளிய இலக்கைத் துரத்திய மே.தீவுகள் அணிக்கு பிளட்சர் (4), சிம்மன்ஸ் (15) ஜோடி மோசமான ஆரம்பம் கொடுத்தது. அடுத்து வந்த ஹெய்ல் சிக்சர் மழை பொழிய, வெற்றியை வேகமாக நெருங்கியது மே.தீவுகள். 38 பந்துகளில் 7 சிக்சர்கள், 4 பவுண்டரியுடன் ஹெய்ல் 67 ஓட்டங்கள் எடுத்தார். 21 போட்டிகளுக்குப் பின் இவர் அடித்த அரைசதம் இது.

அணித் தலைவர் பூரன் (32), ரசல் (7) உதவ, மே.தீவுகள் அணி 14.5 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 142 ஓட்டங்கள் எடுத்து, 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. 2 போட்டிகள் மீதமுள்ள நிலை யில் தொடரை 3-0 என கைப்பற்றியது.

**14,000**

'ரி20' கிரிக்கெட்டில் 14,000 ஓட்டங்கள் எடுத்த முதல் வீரரானார் மே.தீவுகளின் ஹெய்ல். நேற்று 30 ஓட்டங்கள் எடுத்த போது இந்த மைல்கல்லை கடந்தார். இதுவரை 431 போட்டிகளில் 22 சதம், 87 அரைசதம் உட்பட 14,038 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

**ஐ.பி.எல்., தொடரில் அதிகம்**

ஹெய்ல் எடுத்த 14,038 ஓட்டங்களில் ஐ.பி.எல்., தொடரில் அதிகபட்சம் 4950 ஓட்டங்கள் எடுத்தார். அடுத்து சி.பி.எல்.,இல் 2,354, சர்வதேச போட்டிகளில் 1796 ஓட்டங்கள் எடுத்தார்.


## கேள்வி அறிவித்தல் - நல்லூர் பிரதேச சபை
## சபை நிதி வேலைத் திட்டம் 2021 (கட்டம் III)

01. தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, கொக்குவில் அவர்களினால் தகுதிவாய்ந்த ஒப்பந்த காரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க் குறிப்பிட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வீதி மற்றும் வடிகால் வேலைகளுக்காக கோருகின்றார்.
02. தேசிய போட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 2019.05.08ஆம் திகதி 04/2016 (11) ஆம் இலக்க பொது சுற்றறிக்கை 3.2 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பிராந்திய விருப்பம் மற்றும் CIDA தர முன்னுரிமைகள் பொருந்தும்.
03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் '**தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - 021-222-2700, 021-314 2841) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணமொன்றை **தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** என்னும் முகவரியில் 2021.07.14ஆம் திகதியிலிருந்து 2021.08.03ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000.00 (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** என்னும் முகவரிக்கு 2021.08.04ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கேள்வி பிணை வைப்புத் தொகையினை கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனுமதிக் கப்பட்ட வங்கியில் செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் 2021.07.28ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் மு.ப.10.30 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்த காரர்கள் கலந்து கொள்ளமுடியும்.

| இல | தொடர்பு இலக்கம் | வேலை விபரம், ஒப்பந்த இலக்கம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி விண்ணப்பம் சமர்ப்பிக்கப் படும் திகதியிலிருந்து செல்லுபடியாகும் காலம் | | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | செல்லுபடியாகும் காலம் | செல்லுபடியாகும் திகதி | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 1 | NPS/2021/CF/01/ WD-12/03 | பெரியதோட்டம் வீதி 7ம் ஒழுங்கையின் வடிகால் அமைத்தல் மற்றும் வீதி புனரமைப்பு அரியாலை | 5.64 | 90 நாட்கள் | C7 & C6 | 77 நாட்கள | 19.10.2021 | 85,000.00 | 16.11.2021 |

**தலைவர், பெறுகைக்குழு,**
**நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.**

(C-2347)

**2021.07.14**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையவழி கற்றல் செயற்பாடு

## உடல்நலம் பாதிக்கப்படும் மாணவர்கள்

(மாத்தறை)

**இணையவழி கற்றல் செயற்பாடுகளில் அதிக நேரம் ஈடுபடும் மாணவர்கள் கண் பார்வைக் குறைபாடு மற்றும் மன உளைச்சல் போன்ற நிலைமைகளுக்கு உள்ளாகுவது அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**



மாத்தறை பொது வைத்திய சாலையின் சிரேஷ்ட கண் சத்திரசிகிச்சை நிபுணர் பிரியங்க இத்தவல இதனைத் தெரிவித்துள்ளார்.

அண்மைய காலங்களில் அதிகளவான பாடசாலை மாணவர்கள் கண்சிகிச்சை நிலையங்களுக்கு பிரவேசிப்பதை அவதானிக்கக்கூடியதாக உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# மாகாணங்களைக் கடக்க

## மணமக்கள் குடும்பங்களுக்கு அனுமதி

(கொழும்பு)

திருமண பந்தத்தில் இணையும் மணமகன், மணப்பெண் ஆகியோர் வெவ்வேறு மாகாணங்களில் வசிப்பவர்களாயின் அவர்கள் மாகாணங்களுக்கு இடையில் பயணிப்பதற்கு விசேட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

பயணக் கட்டுப்பாடுகளின் போது, திருமண நிகழ்வுகளை நடத்துவதில் ஏற்பட்ட சிக்கல்களை கருத்தில் கொண்டு இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், மணமகன் மற்றும் மணப்பெண் ஆகியோரின் பெற்றோர்களும் மாகாணங்களுக்கு இடையில் பயணிக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# கடனைச் செலுத்த கஞ்சாச் செடி

## பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகே

(கொழும்பு)

கஞ்சா செய்கை மற்றும் ஏற்றுமதியின் ஊடாக நாட்டின் கடனை செலுத்தி முடிக்கலாம் என்றும் பில்லியன் கணக்கில் இலங்கைக்கு இலாபம் ஏற்படும் எனவும் அந்த வகையில் நாட்டில் கஞ்சா செய்கையில் ஈடுபடவும் ஏற்றுமதி செய்யவும் தேவையான சட்ட ஏற்பாடுகள் தயார் செய்யப்பட்டு வருவதாக ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகே தெரிவித்துள்ளார்.



சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள அவர், இவ்விடயம் குறித்து இலங்கையில் உள்ள உயர் ஆயுர்வேத வைத்தியர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

கஞ்சாவை போதைப்பொருள் தேவைக்காக செய்கையிட்டால் மாத்திரமே நமக்கு பிரச்சினை எனவும் ஏற்றுமதி நோக்கில் செய்கையிட்டால் பிரச்சினை கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகில் 50ற்கும் மேற்பட்ட நாடுகள் கஞ்சா செய்கையில் ஈடுபடுவதாகவும் ஆயுர்வேத மருந்துக்கு அது பயன்படுத்தப்படுவதாகவும் டயானா கமகே தெரிவித்துள்ளார்.

இத்திட்டம் செயற்படுத்தப்பட்டபின் அதன் நன்மைகள் வந்தடையும் போது திட்டம் குறித்த பிழையான விமர்சனம் இல்லாது போகுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)

# கைதுகள் தொடரும்

## அறிவித்தது அரசாங்கம்

(கொழும்பு)

பொது இடங்களில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்களை அரசாங்கம் தொடர்ந்தும் கைது செய்யும் என்று ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே பகிரங்கமாக தெரிவித்துள்ளார்.

இவ்வாறு போராட்டங்களில் ஈடுபடுபவர்களைத் தனிமைப்படுத்தல் சட்டத்தின்கீழ் கைது செய்வதற்கான முழு அதிகாரமும் சுகாதார பணிப்பாளருக்கு காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்திற்கு அருகில் அண்மையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் உட்பட 31 பேர் கைது செய்யப்பட்டு தற்போது கட்டாய தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை பொலிஸார் கைது செய்த விதம் பற்றி தென்னிலங்கையில் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான மதுர விதானகே, இனியும் ஆர்ப்பாட்டங்களை நடத்துபவர்களை கைது செய்யும் நிலைப்பாட்டில் அரசாங்கம் தொடர்ந்தும் இருப்பதாகத் தெரிவித்தார். (நி-5)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் செயற்பாடுகள் ஜனநாயகத்தை நசுக்குகின்றன!

(யாழ்ப்பாணம்)

**இலங்கை அரசின் கொவிட்-19 தனிமைப்படுத்தல் செயற்பாடுகள் அனைத்தும் ஜனநாயகத்தின் குரல் வளையை நசுக்குவதற்கே அதிகம் பயன்படுத்தப்படுகின்றது. அரசின் இந்த மோசமான செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிப்பதாக தமிழ்த்தேசிய பண்பாட்டுப் பேரவை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.**

மேலும் நாட்டில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியினருக்கு ஒரு நியாயமும் அநீதிகளுக்கு எதிராக நீதி கேட்டுப் போராடும் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகளுக்கு வேறு ஒரு நியாயம் என்பதும் நாட்டின் அரசியலமைப்பு சட்டத்தின் மீதும் ஜனநாயகத்தின் மீதும் பெரும் அவநம்பிக்கையை ஏற்படுத்துகின்றது.

நாட்டின் அரசு சட்டங்களை தவறாகப் பயன்படுத்தும் நடவடிக்கைகளை உடனே நிறுத்த வேண்டும். இதுவரை காலமும் இவ்வாறு தவறான சட்ட நடவடிக்கைகளால் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்வதோடு ஜனநாயகத்திற்கு முரணான கொத்தலாவல சட்டமூலத்தை நீக்குமாறும் அரசை கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் நாட்டில் இடம்பெறும் அநீதிகளுக்கு எதிராகப்போராடும் அரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகளோடும் தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவை இணைந்து குரல் கொடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம் என மேலும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-7)




# கொத்தலாவல சட்டமூலத்திற்கு எதிராக யாழில் சுவரொட்டிகள்




(குப்பிழான்)

கொத்தலாவல சட்டமூலத்திற்கு எதிராக யாழ்.நகரம் மற்றும் அதனை அண்டியுள்ள பகுதிகளில் முன்னிலை சோசலிசக் கட்சியினரால் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

குறித்த சுவரொட்டிகளில் தனியார் பல்கலைக்கழகங்களைச் சட்டபூர்வமாக்கும், கல்வியை இராணுவமயமாக்கும் கொத்தலாவல சட்டமூலத்தைக் கிழித்தெறி! எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ், சிங்கள மொழிகளில் மேற்படி சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4-7-18)

# 'ஆறுமுகம்' திட்டத்தினை மீண்டும் செயற்படுத்துவது தொடர்பாக ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

இரணைமடு, கல்மடு, விசுவமடு, உடையார்கட்டு போன்ற குளங்களில் இருந்து வழிந்தோடி விரயமாகின்ற நீரைப் பயன்படுத்தி யாழ்.மாவட்டத்திற்கான நன்னீரைப் பெற்றுக்கொள்கின்ற ஆறுமுகம் திட்டத்தினை மீண்டும் செயற்படுத்துவது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் நேற்றைய தினம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடினார்.

குறித்த திட்டம் தொடர்பாக 1962 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பிரஸ்தாபிக்கப்பட்ட போதிலும், ஆனையிறவு கடல் நீரேரியில் பருவ கால மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவோரின் எதிர்ப்பின் காரணமாக கைவிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த திட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்தி ஆனையிறவு கடல் நீரேரியில் 23 வீதமான பகுதியை மறித்து அணை அமைத்து, திட்டத்தினை முன்னெடுப்பது தொடர்பாக தற்போதைய அரசாங்கத்தினால் பிரஸ்தாபிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், பிரதேச மக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு, புதிய திட்டம் தொடர்பாக தெளிவுபடுத்தி, கருத்துக்களை அறிந்து கொள்ளும் வகையில் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது. (4-7-33)

# மஹோற்சவம்

நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக இடைநிறுத்தப்பட்ட நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலய மஹோற்சவம் ஆடிப்பூரத்தை முடிவாகக் கொண்டு எதிர்வரும் பதினாறாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இருபத்து ஏழு நாட்கள் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் அதிகாலை ஆறு மணிக்கு சம்ப்ரோக்ஷண கும்பாபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து ஏழு மணிக்கு வசந்தமண்டப பூஜையும் எட்டு மணிக்கு கொடியேற்றமும் இடம்பெறும் என ஆலய பிரதமகுரு அறிவித்துள்ளார். (4-7-33)



இராணுவத்தினரால், சுழிபுரம் மற்றும் துணைவி பகுதியில் அமைக்கப்பட்ட வீடுகள் நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டு உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டது. (படம்:-கஜிந்தன்)



தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் செயலாளர் நாயகமும், பாராளுமன்ற முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமாகிய அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 32 ஆவது நினைவு தினம் நேற்று செவ்வாய்க்கிழமை வலிகாமம்-மேற்கு பிரதேச சபை வளாகத்தில் அமைந்துள்ள அவரது நினைவுருவச் சிலையின் முன்பாக இடம்பெற்றது. (படம்-கஜிந்தன்)

# வர்த்தக நிலையங்கள் திடீர் சுற்றிவளைப்பு

(குப்பிழான்)

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசனின் கட்டளைக்கு அமைவாகவும் யாழ்.மாவட்டப் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் வடமாகாண உதவிப் பணிப்பாளரின் வழிகாட்டலுக்கு அமைவாகவும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உத்தியோகத்தர்களால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நல்லூர், சுதுமலை, கட்டுவன், புன்னாலைக்கட்டுவன் ஆகிய பிரதேசங்களில் திடீர்ச் சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

உரம் தொடர்பான கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் வர்த்தக நிலையங்களும் பரிசோதனை செய்யப்பட்டன. பாவனையாளர் அதிகார சபைக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டதுடன் சட்டவிரோதமான வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்கள் மீது வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது. (4-7-18)

# கசிப்பு காய்ச்சியவருக்கு கொரோனா; தனிமைப்படுத்தலில் பொலிஸார்

(சாவகச்சேரி)

தென்மராட்சி-சரசாலை குருவிக்காட்டு பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனால் குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்த சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஐந்து பொலிஸார் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் சரசாலை-குருவிக்காட்டுப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன், கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்திய பெருமளவான உபகரணங்களும் கைப்பற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-7-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேதன உரத்தை தயாரித்து பயன்படுத்துவதற்காக விவசாயிகளுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு

## அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

**எதிர்வரும் பெரும்போகத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நெற் செய்கைக்கான விவசாய சேதன உரத்தை தயாரித்து பயன்படுத்துவற்காக விவசாயிகளுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.**

கமத்தொழில் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே முன்வைத்த யோசனைக்கே அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

இதற்கமைய, சேதன உரத்தை தயாரிப்பதற்கு ஒரு ஹெக்டேயருக்கு 12, 500 ரூபாய் வீதம் அதிகபட்சமாக 2 ஹெக்டேயர்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பெரும்போகத்திற்கான 8 இலட்சம் ஹெக்டேயர்கள் அளவில் நெற் செய்கைக்கான சேதன உரத்தைத் தயாரித்துக் கொள்வதற்காக கமத்தொழில் அமைச்சு இந்த வேலைத்திட்டத்தினை தயாரித்துள்ளது.

கமநலசேவைகள்திணைக்களத்தின் வழிகாட்டலின் அடிப்படையில், விவசாயிகள் தரமான சேதன உரத்தைத் தயாரிப்பதற்கும் அனுமதிப் பத்திர உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப்படும் சேதனப் பசளையின் அளவுகளை அதிகரிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்படி, சேதன உரத்தை தயாரிப்பதற்காக விவசாயிகளுக்கான குறித்த ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# இலங்கை பெண்களை வலுவூட்ட அமெரிக்கா நிதியுதவி

(கொழும்பு)

சிறு வர்த்தகங்களுக்கு உதவியளிப்பதற்கும்இலங்கை பெண்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டுவதற்கும் 150 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஐக்கிய அமெரிக்கா வழங்கியுள்ளது. இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்கத் தூதரகத்தினால் நேற்று முன்தினம்திங்கட்கிழமை வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுப் பரவல் ஏற்படுத்திய பொருளாதார சவால்களை சமாளிப்பதற்கு, இலங்கையிலுள்ள சிறு வர்த்தகங்கள்முயலும் இவ்வேளையில் அவற்றுக்கு அமெரிக்கா தொடர்ந்தும் உதவியளித்து வருவதாக குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி-5)

# இலத்திரனியல் வாகனப் பாவனையை அதிகரிக்க அமைச்சரவை அனுமதி


(கொழும்பு)

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் தரவுகளுக்கமைய 2020 ஆம் ஆண்டிறுதியில் பதிவு செய்யப்பட்டுள்ள மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை 8 மில்லியன்களைத் தாண்டியுள்ளது.

அவற்றில் குறிப்பிடத்தக்களவு வாகனங்கள் 10 வருடங்களுக்கும் அதிகமாக பழைய வாகனங்கள் ஆவதுடன், அவ்வாறான பழைய வாகனங்கள் சரியான வகையில் பராமரிக்கப்படாமையால் நச்சு வாயுக்கள் வெளியிடப்படுவதற்குக் காரணமாக அமைந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கையில் வாயு மாசடைதலில் 60 வீதமானவை மோட்டார் வாகனங்களால் இடம்பெறுவதாக மொறட்டுவை பல்கலைக்கழகம் மற்றும் இதர நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மீள்பிறப்பாக்க எரிசக்தித் திட்டங்களைத் துரிதமாக மேற்கொள்வது அரசாங்கத்தின் முன்னுரிமைப் பணியாக அமைவதால், மோட்டார் வாகனப் போக்குவரத்திற்கு மீள்பிறப்பாக்க எரிசக்தியைப் பயன்படுத்துதல் தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, இலத்திரனியல் வாகனப்பாவனையை ஊக்குவிப்பதற்காக மூலோபாயத்திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக சுற்றாடல் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி-5)




# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 58 ¼ செவ் 7 சூரி 9 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: A/L சுயதொழில்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த குடும்பப்பாங்கான பெண்
தொ.இ: B/11922

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 35.05 செவ் 3 சூரி 2 இல்
உயரம்: 178cm
தகைமை/தொழில்: சட்டத்தரணி
எதிர்பார்ப்பு: சட்டத்தரணி, வைத்தியர்
தொ.இ: B/11924

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்திரம்
கி.பா: செவ் 12 சூரி 8 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: நிரந்தர கனடியன் கொம்பனி
எதிர்பார்ப்பு: படித்த வேலை பார்ப்பவர்
தொ.இ: B/11926

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா:- செவ் 9 சூரி 7 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:A/L com BIT Degree
எதிர்பார்ப்பு: உள்நாடு.வெளிநாடு
தொ.இ: B/11927

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: செவ் 4 சூரி 3 இல்
எதிர்பார்ப்பு:விவசாயம் செய்யும், கடையில் நிற்கும் மணமகன் சம்மதம்
தொ.இ:G/11937

பிறப்பு: 1991 கிறிஸ்தவம்
நட்சத்திரம்: உத்தரம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: MBBS (China)
எதிர்பார்ப்பு: வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர்
தொ.இ:G/11940

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 17 ¾ செவ். சூரி 12 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:Audit Manager
எதிர்பார்ப்பு:படித்த மணமகன், உள்நாடு, வெளிநாடு
தொ.இ:G/11946

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 48 செவ். சூரி 8 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L KFC 5 வருடம்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த மாப்பிள்ளை
தொ.இ:G/1947

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் கைதுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஐ.நாவிடம் மகஜர் கையளிப்பு

(கொழும்பு)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கைது செய்யப்பட்டு இராணுவ முகாமில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியிடம் ஆசிரியர் சங்கம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளது.

கொழும்பில் ஆசிரியர் சங்கம் சார்பில் மேற்கொண்ட ஜனநாயகப் போராட்டத்தின்போது ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உட்பட 12 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் அவர்களைத் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் பொலிஸார் முல்லைத்தீவு இராணுவ முகாமில் தனிமைப்படுத்தியுள்ளனர்.

இதனைக் கண்டித்தே இலங்கை ஆசிரிய சங்கத் தலைவர் உள்ளிட்டவர்களால் நேற்று ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது. (நி-5)

# சிறுவர் துஷ்பிரயோகம்

## சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்யும் பிரிவுக்கு அனுமதி

(கொழும்பு)

துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படும் சிறார்களின் சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்வதற்கான பிரிவுகளை ஸ்தாபிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

ஒன்பது மாகாணங்களிலும் இந்த திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படும் சிறார்கள், பகிரங்க நீதிமன்றங்களில் சாட்சி வழங்கும் போது பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்குவதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக அவ்வாறான சிறார்களின் சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்து நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை கொழும்பில் மாத்திரம் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த நடவடிக்கையை 9 மாகாணங்களிலும் முன்னெடுப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் கல்வி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மாவட்டத்திற்கு மேலும் சுமார் 22 ஆயிரம் பைஸர்

(மன்னார்)

**மன்னார் மாவட்டத்திற்கு என மேலும் வழங்கப்பட்டுள்ள 22 ஆயிரத்து 230 "பைஸர்" தடுப்பூசிகள் இன்று புதன் கிழமை முதல் 30 வயதிற்கு மேற்பட்ட மன்னார் மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்களுக்கு வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.**

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

செப்டெம்பர் மாதம் நாட்டை முழுமையாக திறக்க வேண்டும் என்ற ஜனாதிபதியின் சிந்தனையின் அடிப்படையில் இந்திய மீனவர்களுடன் தொடர்புபடுகின்ற மன்னார் மீனவர்களினால் ஏற்படக்கூடிய கொரோனா அச்ச நிலையை நீக்குவதற்காக மன்னார் மாவட்டத்திற்கு விசேடமாக குறித்த தடுப்பூசிகள் ஒதுக்கப்பட்டது.

இவற்றினுடைய விநியோகம் இன்று முதல் ஆரம்பமாகும். குறித்த தடுப்பூசிகள் மன்னார் மாவட்டத்தில் 5 அல்லது 6 நிலையங்களில் ஒவ்வொரு நாளும் வழங்கப்படும்.

இதன்போது 30 வயதிற்கு மேற்பட்ட மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த நிரந்தர வதிவுரிமை பெற்ற அனைவரும் எந்த நிலையத்திலும் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

18 வயதுக்கு மேற்பட்ட 3 மாதம் கழிந்த கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் ஒரு வயதிலும் குறைந்த குழந்தைகளைக் கொண்டுள்ள தாய்மார்களுக்கு தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை எதிர்வரும் வாரத்தில் இடம்பெறும்.

இவர்கள் பொதுமக்களுக்கான தடுப்பூசி வழங்கும் நிலையங்களுக்குச் சென்று தடுப்பூசியை பெற்றுக்கொள்ள தேவையில்லை. இவர்களுக்கு விசேட விதமாக வேறு நிலையங்களில் எதிர்வரும் வாரம் வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (7-8-285)



முல்லைத்தீவு பழைய செம்மலை, நீராவியடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் நேற்றுக் காலை கோட்டைக்கேணி பிள்ளையார் ஆலயத்திலிருந்து மடப்பண்டம் எடுத்துவரப்பட்டதோடு ஆரம்பமாகியது. 150 பேர் வரை நிகழ்வுகளில் பங்குபற்ற அனுமதி இருப்பினும் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களோடு ஆலய உற்சவம் ஆரம்பமாகியமை குறிப்பிடத்தக்கது.

(படம்:-தவசீலன்)

# காணாமல் போன மாணவன் வீடு திரும்பினார்

(பனிக்கன்குளம்)

மாங்குளம் துணுக்காய் வீதி யில் உதயசூரியன் நகர் பகுதி யில் வசிக்கும் விஜயகுமார் விதுசன் (வயது-14) மாங்குளம் மகா வித்தியாலய மாணவன். கடந்த 10 ஆம் திகதி இரவு முதல் காணாமல் போயிருந்த நிலையில் மறுநாள் 11 ஆம் திகதி அன்று மாலை வீடு திரும்பியுள்ளார்.

மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் சென்று முறைப்பாட்டினை நீக்கி வாய்முறைப்பாட்டின் பின்னர் குறித்த மாணவன் வீட்டிற்குச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-8)

# விண்ணப்பங்கள் கோரல்

(கிளிநொச்சி)

கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டடப்பொருட்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சினால் வடக்குக் கிழக்கில் உள்நாட்டில் இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்த மற்றும் இந்தியாவிலிருந்து மீளத்திரும்பியவர்களுக்காக 2021 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும் வீடமைப்புத்திட்டத்தின் மூலம் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள வீடுகளை தொழில்நுட்ப மேற்பார்வை செய்வதற்கு கிளிநொச்சி மாவட்ட செயலாளரினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தேசிய பயிலுநர் மற்றும் தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா (சிவில்) சான்றிதழ் அல்லது கல்வி உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் சான்றிதழ் (சிவில்) தகமையுடன் ஆகக்குறைந்தது இரண்டு வருட முன்னனுபவமுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது சுயவிபரக்கோவையினை (தங்கள் தொலைபேசி இலக்கத்துடன்) 25.07.2021 ஆம் திகதிக்கு முன்னர் திட்டமிடல் பணிப்பாளர், மாவட்டச் செயலகம் கிளிநொச்சி என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், ரூ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (7-8)

# மன்னாரில் கரையொதுங்கிய இந்திய நாட்டுப் படகு



(மன்னார்)

மன்னார் பொலிஸ் பிரிவில் உள்ள சௌத்பார் கடற்கரை பகுதியில் நேற்று முன்தினம் மாலை இந்திய நாட்டுப் படகு என சந்தேகிக்கப்படும் படகு ஒன்று கடற்கரை பகுதியில் கரை ஒதுங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த படகில் பதிவு இலக்கமோ, படகின் இலக்கமோ இல்லாத நிலையில் படகில "அர்ச்சனா" என பெயர் குறிப்பிடப்பட்டு சிறிய உடைவுகளுடன் குறித்த நாட்டுப்படகு கரை ஒதுங்கியுள்ளது.

குறித்த படகு காற்றின் வேகம் காரணமாக கரையொதுங்கியுள்ளதா? அல்லது சட்டவிரோத கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்டு கைவிடப்படுள்ளதா? என்ற கோணத்தில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (7-8-285)



அரசின் வறுமை ஒழிப்பு செயற்றிட்டத்திற்கமைய உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்குடன் அறிமுகப்படுத்தப்பட்ட சௌபாக்கியா உற்பத்தி கிராமத்தின் விற்பனை நிலையத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் நேற்று இடம்பெற்றது. இதனை பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன், உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைத்தார். (படம்-சதீஸ்)

# இராணுவத்தினரால் இரண்டு வீடுகள் கையளிப்பு

(தருமபுரம்)

வீடு இன்றி தற்காலிக வீட் டில் வசித்து வந்த வறுமைக்கோட்டுக்குட்பட்ட கண்டாவளை பிரதேச செயலாளர் பகுதியில் வசித்து வரும் பளைய வட்டக்கச்சி பெரிய குளம் பகுதியில் ஒன்றும் பிரமந்தனாறு மயில்வாகன புரம் பகுதியில் ஒன்றும் இராணுவத்தினரால் நிர் மாணிக்கப்பட்ட வீடு உரியவரிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் கிளி நொச்சி இராணுவ தலைமையக கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ஏச்.பி ரணசிங்க கலந்துகொண்டு வீட்டினை கையளித்திருந்தார்.(7-8-316)



மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட 6 கலாமன்றங்களுக்கு இசைக்கருவிகள் வைபவ ரீதியாக நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டது.

(படம்: ஜோசப்நயன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராசிபலன்

14.07.2021
ஆனி 30, புதன்கிழமை
சதுர்த்தி முற்பகல் 7.13 மணிவரை
பூரம் பின்னிரவு 3.12 மணிவரை
சுபநேரம் 4.30-6.00 மணிவரை
இராகுகாலம் 12.00-1.30 மணிவரை
சந்திராஷ்டமம்: திருவோணம், அவிட்டம்
இரவு நடேசர் அபிஷேகம் வளவன்

**மேஷம்:** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், வழிபாடு ஆனந்தம் தரும், வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**ரிஷபம்:** தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், பணிபுரியும் இடத்தில் புகழ் கூடும்.

**மிதுனம்:** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்:** பணத் தேவைகள் பூர்த்தியாகும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடும் நாள், திடீர் பயணங்கள் ஏற்படலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன நன்மையுண்டு.

**கன்னி:** வழிபாட்டில் நம்பிக்கை கூடும் நாள், தொழில் நலன்கருதிய இடமாற்றங்கள் ஏற்படலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சயன சுகக் குறைவான நாள்.

**துலாம்:** ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும்.

**விருச்சிகம்:** உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வரலாம், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உற்சாகத்துடன் பணி புரிவீர்கள்.

**தனுசு:** வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதியைக் கொடுக்கும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**மகரம்:** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், தொழிலில் கவனத்துடன் நடந்து கொள்வது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள்.

**கும்பம்:** மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மீனம்:** அலுவலகப் பணிகள் துரிதமாகும், நல்லவர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், சுவாரஸ்யமான நாள்.

மூளையை நா முந்த விடாதே.
சிந்திக்காமல் பேசாதே


# முகமாலை, ஆனையிறவு பகுதிகளில்

# 28, 644 வெடி பொருட்கள் மீட்பு

## ஸார்ப் நிறுவனம் தெரிவிப்பு

(கண்டாவளை)

**16 இலட்சத்து 81 ஆயிரத்து 261 சதுரமீற்றர் பரப்பளவில் அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.**



முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்குட்பட்ட அம்பகாமம் தச்சடம்பன் ,கிளிநொச்சி ,பச்சிலைப்பள்ளி பிரதேசத்திற்குட்பட்ட முகமாலை மற்றும் ஆனையிறவு ஆகிய பகுதிகளில் 16 இலட்சத்து 81 ஆயிரத்து 261 சதுரமீற்றர் பரப்பளவில் இருந்து 28 ஆயிரத்து 744 அபாயகரமான வெடி பொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.

நேற்று ஸார்ப் நிறுவனத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வடபகுதியில் மனிதாபிமான கண்ணி வெடியகற்றலில் ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் ஈடுபடும் ஸார்ப் மனிதாபிமானக் கண்ணி வெடியகற்றும் அரச சார்பற்ற நிறுவனமானது 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொட க்கம் 2021 ஜூலை மாதம் 13 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் குறித்த அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக தெரிவித்தார்.

தொடர்ந்து இந்நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணிகளை முகமாலை பகுதியில் துரித கதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(7-8-315)

## வவுனியாவிலும் 30 வயதுக்கு மேல் தடுப்பூசி

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் 30 வயதிற்கு மேற்பட்ட 45 ஆயிரம் பேருக்கு பைஸர் கொவிட் தடுப்பூசிகள் ஏற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தடுப்பூசி வழங்குவதற்கான நிலையங்கள் மற்றும் திகதிகள் என்பன பின்னர் அறிவிக்கப்படும் என சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

(7-8-250)

## தபால் ஊழியர்களுக்கும் தடுப்பூசி



(குருமன்காடு)

வவுனியா தபால் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கு கொவிட் தடுப்பூசிகள் சுகாதாரப் பிரிவினரால் ஏற்றப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் நேற்று காலை 8.30 மணி தொடக்கம் 1.30 மணி தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை இடம்பெற்றது.

(7-8-250)

# சீனாவின் கடலட்டைப் பண்ணையை சட்ட ரீதியாக அகற்ற நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கௌதாரி முனை பகுதியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டு இருக்கும் சீனாவினுடைய கடல் அட்டை பண்ணையினை எவ்வாறு அகற்றுவது என்பது தொடர்பாக நேற்று முன்தினம் கிளிநொச்சி கௌதாரிமுனை பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் கௌதாரிமுனை கடற்தொழிலாளர்கள், கௌதாரி முனை பகுதி இளைஞர்கள் மற்றும் மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

குறித்த கலந்துரையாடலில் கௌதாரிமுனை பகுதியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட சீனாவினுடைய கடல் அட்டைப்பண்ணையை எவ்வாறு அகற்றுவது? இதற்கான சட்ட ஆலோசனைகளை எவ்வாறு பெற்றுக் கொள்வது? என்பன தொடர்பாக தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. கடற்றொழிலாளர் சங்கங்கள் எவ்வாறான செயற்பாடுகளை இவ்வாறு சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட கடலட்டை பண்ணைக்கு எதிராக மேற்கொள்ளப்படுவது என்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.(7-8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் நாட்டைப் பிரித்தால் கடும் போராட்டம் வெடிக்கும்

## பழ.நெடுமாறன் எச்சரிக்கை

**(சென்னை)**

**கொங்கு நாடு என்ற பெயரில் புதிய மாநிலம் ஒன்றை உருவாக்கி தமிழ்நாட்டை பிரிக்க இந்திய அரசு முயற்சி எடுத்துள்ள நிலையில் அவ்வாறு தமிழ்நாட்டைப் பிரித்ததால் கடும் போராட்டம் வெடிக்கும் என பழ. நெடுமாறன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ.நெடுமாறன் விடுத்துள்ள அறிக்கை,

தமிழ்நாட்டின் மேற்கு மாவட்டங்களைப் பிரித்து கொங்கு நாடு என்ற பெயரில் புதிய மாநிலத்தை உருவாக்குவது பற்றி இந்திய அரசு ஆராய்ந்து வருவதாகச் செய்தி வெளியாகியுள்ளது.

இம்முயற்சி உண்மையாக இருக்குமானால், அதை எதிர்த்துத் தமிழர்கள் மிகக் கடுமையாகப் போராட வேண்டிய சூழ்நிலை உருவாகும் என எச்சரிக்க விரும்புகிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ்நாட்டை வடக்கு, தெற்கு என பிரித்து இரு மாநிலங்களாக்கும் கோரிக்கையை சிலர் எழுப்பினர். அப்போதும் தமிழர்களின் கடும் எதிர்ப்பின் விளைவாக அத்தகைய கோரிக்கை கைவிடப்பட்டது.

1956 ஆம் ஆண்டில்தான் தமிழ்நாடு முதன் முதலாக ஒன்றுபட்ட மாநிலமாக ஆக்கப்பட்டது. அப்போதும் சில பகுதிகளை நாம் இழக்க நேரிட்டது. தமிழ்நாட்டுத் தமிழர்களும் உலக நாடுகளில் வாழும் தமிழர்களும் பல்வேறு சிக்கல்களைச் சந்தித்துவரும் இவ்வேளையில், தமிழ்நாட்டுத் தமிழர்கள் ஒன்றுபட்டு நின்று போராடாவிட்டால், நம்மையும் காப்பாற்றிக்கொள்ள முடியாது. நம்மை நம்பியிருக்கிற உலகத் தமிழர்களையும் காக்க முடியாது. எனவே, தமிழ்நாட்டைப் பிரிக்கும் செயல் எந்த வடிவத்தில் வந்தாலும் அதை எதிர்த்துப் போராடத் தயாராகுமாறு அனைவரையும் வேண்டிக் கொள்கிறேன் என அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். (8-7)

# கொரோனா மருத்துவமனையில் பாரிய தீ விபத்து

### ஈராக்கில் சோகம்

## • 54 பேர் பலி • 67 பேர் காயம்

(ஈராக்)

ஈராக்கில் கொரோனா மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்துக் காரணமாக மருத்துவமனையில் சிக்கி 44 நோயாளிகள் உயிரிழந்துள்ளனர்.

ஈராக்கின் தெற்கு நகரமான நாசிரியாவில் உள்ள கொரோனா மருத்துவமனையில் உள்ள ஒட்சிசன் தொட்டி வெடித்ததில் ஏற்பட்ட தீ விபத்தில் 44 நோயாளிகள் சிக்கி பலியாகினர். மேலும், 67 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு தீயணைப்பு வீரர்கள் விரைந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். தீ விபத்து குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8-7)




# சீன கம்யூனிஸ்ட் கட்சியில் சேர ஆர்வம் காட்டும் ஜாக்கி



(பீஜிங்)

சீன திரைப்பட சங்கத்தின் துணைத்தலைவராக பதவி வகித்து வரும் ஜாக்கி சான், பீஜிங்கில் நேற்று முன்தினம் நடந்த திரைப்பட நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று பேசினார். அப்போது அவர் பேசியதாவது,

கடந்த சில ஆண்டுகளில் சீனா மிக வேகமாக முன்னேறி வருகிறது. இதை பல நாடுகளுக்குச் செல்லும்போது நேரடியாக நான் உணர்ந்துள்ளேன். சீன குடிமகனாக இருப்பதில் பெருமை அடைகிறேன்.

சீன கம்யூனிஸ்ட் கட்சி கொடுத்த வாக்குறுதிகளை மிகக் குறைந்த காலத்திலேயே நிறைவேற்றி வருகிறது. எனவே, அக்கட்சியில் உறுப்பினராக சேர ஆர்வமாக உள்ளேன் என அவர் தெரிவித்தார். (8-7)

# பூமியை நோக்கி வரும் சூரியப் புயல்



(வோஷிங்டன்)

பூமியின் மீது சூரியப் புயல் மோதவுள்ளதாக அதிர்ச்சித் தகவலை அமெரிக்க நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளது. இது குறித்து அவர்கள் கூறியுள்ளதாவது, சூரியப் புயல் ஒன்று பூமியை நோக்கி சுமார் 16 இலட்சம் கி.மீ.வேகத்தில் வந்து கொண்டிருப்பதாகவும் இதனால் தொலைத்தொடர்ப்புக் கருவிகளாக ஜி.பி.எஸ்., தொலைபேசிச் சிக்னல்கள், சாட்டிலைட் ரிவி உள்ளிட்ட பொருட்கள் சேதமடைய 'வாய்ப்புள்ளது என நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (8-7)

**உலகளவில்**

**உயிரிழப்பு :- 4 058 8**

**தொற்று :- 188 264**

**(நேற்றைய நில**

# கூட்டம் கூ

## இந்திய ம

(டில்லி)

கூட்டங்களை தவிர்க்க வேண்டு இந்திய மருத்துவ சங்கம் வேண்டு கோ விடுத்துள்ளது.

கொரோனாத் தொற்றின் மூன்றா அலையை தடுக்க முடியாது. ஆகைய மக்கள் கூட்டங்களை தவிர்க்க வேண் என இந்திய மருத்துவ சங்கம் வேண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# இரு வேறு தடுப்பூசிகள் கலந்து பாவித்தால் ஆபத்து

## உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

**(ஜெனிவா)**

**கொரோனாவுக்காக 2 தடுப்பூசிகளைப் போட்டுக் கொள்ளலாம் என்பது சரியான நடவடிக்கை அல்ல. இன்னும் உலக சுகாதார அமைப்பு அதில் ஒரு முடிவுக்கு வரவில்லை என உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானி சவும்யா சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.**




தாய்லாந்து போன்ற சில நாடுகளில் 2 வெவ்வேறு நிறுவன தடுப்பூசிகளை போட்டதில் நல்ல பலன் கிடைத்திருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

எனவே 2 ஊசிகளை கலந்து போட்டுக்கொள்ளலாம் என்ற எண்ணம் பல நாடுகளில் உருவாகி இருக்கிறது.

இது சம்பந்தமாக உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானி சவும்யா சுவாமிநாதன் கூறியதாவது.

இன்னும் உலக சுகாதார நிறுவனம் அதில் ஒரு முடிவுக்கு வரவில்லை.

இப்போதுள்ள குழப்பமான நிலையில் 2 வெவ்வேறு நிறுவனத்தின் ஊசிகளைப் போட்டுக் கொள்ளலாம் என்று சிபாரிசு செய்வது ஆபத்தை ஏற்படுத்தி விடலாம்.

உரிய தரவுகளுடன் ஆய்வுகள் மேற்கொண்ட பிறகே 2 ஊசிகளைப் பயன்படுத்துவது பற்றி சிந்திக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (8-7)



இந்திய இராணுவத்தில் பணியாற்றி வீர மரணம் அடைந்த தமிழக இராணுவ வீரர்கள் குடும்பத்தினருக்கு கார்கில் போராட்ட வீரர்கள் நிவாரண நிதியிலிருந்து, தலா 20 இலட்சம் ரூபாய் நேற்றையதினம் தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வழங்கி வைத்தார்.

**...ல் கொரோனா**

**...58 898**

**...264 083**

**(...நிலவரம்)**

# இமாசல பிரதேசத்தில் கனமழை வெள்ளத்தால் மக்கள் பாதிப்பு

(டில்லி)

இமாசல பிரதேசத்தில் கனமழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் அங்கு உள்ள மக்களின் வாழ்க்கை முறை பாதிக்கப்பட்டுள்ளது.

இமயமலை அடிவாரத்தில் அமைந்துள்ள இமாசல பிரதேச மாநிலத்தில் கனமழையால் பெரும் பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது. இடைவிடாது பெய்த மழையால் பல மாவட்டங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு உள்ளது.

இதனால் பல இடங்களில் கட்டடங்களுக்குள் வெள்ளம் சூழ்ந்திருக்கிறது.



அந்த வகையில் தர்ம சாலாவை ஒட்டியுள்ள மாஞ்சி காட் பகுதியில் 2 கட்டடங்களை வெள்ளம் அடித்துச்சென்றது. பாக்சுனாக்கில் அரசு பள்ளிக் கட்டடம் உட்பட பல கட்டடங்கள் வெள்ளத்தில் சிக்கி சேதம் அடைந்திருக்கின்றன.

மண்டி-பதன் கோட் சாலையில் பாலம் ஒன்று அடித்துச்செல்லப்பட்டதால் போக்குவரத்து இரத்து செய்யப்பட்டு இருக்கிறது. மேல் தர்மசாலாவில் கால்வாய் ஒன்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் 4 கார்கள், ஏராளமான இருசக்கர வாகனங்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டன.

கனமழை மற்றும் வெள்ளப் பெருக்கு காரணமாக மாநிலத்தில் பெரும்பாலான பகுதிகளில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு உள்ளது. (8-7)

# ...கூடுவதை தவிர்க்க வேண்டும்

## ...மருத்துவ சங்கம் வேண்டுகோள்

...ண் டும்-
...ட்டு கோள்

...ன்றாவது
...ஆகையால்
...வேண்டும்
...வேண்டு

கோள்விடுத்துள்ளது.

இது குறித்து மருத்துவ சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில், எந்தவொரு தொற்றுக்கும் 3 ஆவது அலை தவிர்க்க முடியாததாகவும் உடனடியாக ஏற்படுவதாகவும் இருந்திருப்பதற்கு வரலாற்றுப் பூர்வ மற்றும் சர்வதேச ஆதாரங்கள் உள்ளன.


அப்படியிருந்தபோதும் மூன்றாவது அலையைத் தணிக்க எல்லோரும் உழைக்க வேண்டியிருக்கும். இந்த நேரத்தில் நாட்டின் பல பகுதிகளில் அரசுகளும் பொது மக்களும் கொரோனா நெறிமுறைகளைப் பின்பற்றாமல் வெகுஜனக் கூட்டங்களில் பங்கேற்பதை பார்ப்பது வேதனையாக உள்ளது எனத் தெரிவித்துள்ளது. (8-7)

# நேட்டோ படைகளின் உயர் தளபதி பதவி விலகல்

(வோஷிங்டன்)

ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்க மற்றும் நேட்டோ படைகளின் உயர் தளபதி ஜெனரல் ஆஸ்டின் ஸ்கொட் மில்லர், தனது பதவியிலிருந்து விலகியுள்ளார்.

அவர் பதவியில் இருந்து விலகி, அவரது பொறுப்புக்களை பிராந்தியக் கட்டுப்பாடுகளை நிர்வகிக்கும் கீழ்நிலை அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளார்.



நேற்று முன்தினம் நடந்த எளிமையான நிகழ்ச்சி ஒன்றில் தன்னுடைய பொறுப்புகளை இரு அமெரிக்க ஜெனரல்களிடம் ஒப்படைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (8-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகங்களை அடக்குவதற்கு யாருக்கும் அதிகாரமில்லை

(கொழும்பு)

**ஊடக அடக்குமுறையை மேற்கொள்ள யாருக்கும் இடமளிக்கப்போவதில்லை. அவ்வாறான சக்திகளுக்கு எதிராகப் போராட எதிர்க்கட்சி தயாராக இருக்கின்றது.**



அத்துடன் ஊடகங்கள் வெளிப்படுத்தும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பது அரசாங்கத்தின் கடமை என்பதை அரசாங்கமும் உணர்ந்து கொள்ள வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றியதால் ஏற்பட்டிருக்கும் பாதிப்பு மற்றும் எதிர்காலத்தில் இது தொடர்பான சம்பவங்கள் இடம்பெறாமல் தடுப்பது தொடர்பாக ஆராயும் குழுவின் கலந்துரையாடல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நீதி அமைச்சில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட பின்னர் ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வெளிப்படுத்துவது ஊடகங்களின் கடமை. அந்த வகையில் நாட்டில் தற்போது மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக தடுப்பூசி ஏற்றுவதில் இருக்கும் பிரச்சினை, விவசாயிகளுக்கு தேவையான உரம் இல்லாத பிரச்சினை, எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றியதால் கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கி இருக்கும் பிரச்சினை எனப் பல பிரச்சினைகள் மக்களுக்கு இருக்கின்றன.

இதில் சில பிரச்சினைகள் அரசாங்கத்துக்கு தெரியாமல் இருக்கும். அதனால் ஊடகங்கள் இந்த பிரச்சினைகளை வெளிப்படுத்தும் போது, அது தொடர்பில் கவனம் செலுத்தி அதற்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பது அரசாங்கத்தின் கடமை.

மாறாக மக்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதை தடுக்கும் வகையில் ஊடகங்களை அடக்குவதற்கு அரசாங்கத்துக்கோ வேறு யாருக்கும் எந்த அதிகாரமும் இல்லை.

நாட்டில் இருக்கும் எந்தவொரு ஊடக நிறுவனத்துக்கும் ஊடகவியலாளருக்கும் அடக்கு முறைகள் ஏற்படுவதற்கு நாங்கள் இடமளிக்க மாட்டோம்.

ஊடகங்களை அடக்குவதற்கு யாருக்கும் அதிகாரம் இல்லை. மாறாக ஊடகங்கள்தான் தங்களுக்கான சுய கட்டுப்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும். பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சி என்ற வகையில் ஊடக அடக்கு முறைக்கு எதிராக தொடர்ந்து செயற்படுவோம் என அவர் தெரிவித்தார். (நி-5)

# மரபணு மாற்றமடைந்த திரிபுகளுடன் 14 பேர் கொழும்பில் அடையாளம்

(கொழும்பு)

மரபணு மாற்றமடைந்த கொவிட் திரிபுகள் கொண்டதாக சந்தேகிக்கப்படும் 14 பேர் கொழும்பில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொழும்பு மாநகர சபை அதிகாரப் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் பெற்றுக்கொண்ட 25 எழுமாறான மாதிரிகளில், மரபணு மாற்றமடைந்த கொவிட் திரிபுகள் காணப்படுவதாக சந்தேகிக்கப்படும் 14 மாதிரிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, மாலைதீவு பிரஜை ஒருவர் உட்பட 19 பேர் இந்தியாவின் கொடிய "டெல்டா" வைரஸ் தொற்றாளர்களாக கொழும்பு உள்ளிட்ட சில மாவட்டங்களில் அடையாளம்காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# ஜி.எஸ்.பி.வரிச்சலுகை இழக்கும் அபாயமில்லை

## அமைச்சர் தினேஷ் குணவர்த்தன

(கொழும்பு)

இலங்கை ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை இழக்கும் அபாயம் இல்லை என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே இவ் வாறு தெரிவித்தார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அரசாங்கத்தையும் இராணுவ வீரர்களையும் காட்டிக் கொடுக்க முயன்றவர்களே இவ்வாறு அவதூறு பரப்பி வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும் இந்த விடயம் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்துடன் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அன்பு என்றால் என்ன?

ஒரு பெரியவரைப் பார்த்துக் கேட்டேன்.

"இந்த உலகத்திலே எல்லோரும் அன்பைப் பற்றியும் அதன் பெருமைகளைப் பற்றியுமே பேசிக்கிட்டிருக்றார்களே...அன்பு என்ன அவ்வளவு தூரம் பேச வேண்டிய ஒரு விடயமா?" என்று கேட்டேன்.

இதுக்கு அவர் சொன்னார்:

"நமக்கு உண்மையான அன்பென்றால் என்னென்றே தெரியாது.... அதனாலே தான் அதைப்பற்றி அதிகமா பேசிக்கிட்டிருக்கோம்" என்றார். (அவரு கையிலே ஓஷோ புத்தகம் வைத்திருந்தார்)

எனக்குப் புரியவில்லை..

அப்புறம்தான் அவரு விளக்கமா சொன்னார்:

பொதுவா நாம வாழ்ந்து பார்க்காததைப் பற்றி நம்ம மனசு அதிகமா பேசும்... உண்மையான அன்பை நாம் இன்னும் அனுபவித்துப் பார்த்ததில்லை. அது நம்மகிட்டே உயிரோடு இயங்கவில்லை!

உண்மையிலே அன்பு இயங்கிக்கொண்டிருந்தால் நாம அதைப் பற்றி அதிகமாகப் பேச வேண்டிய அவசியமே இல்லை.

நாம அதிகமாகப் அதைப்பற்றி பேசுறதுலேயிருந்தே அது உயிரோடு இயங்கவில்லை என்கிறது தெளிவாகுது.

நாம பல வழிகளிலே அது இயங்கிறது மாதிரியான ஒரு பொய்த் தோற்றத்தைக் கொடுத்துக்கிட்டிருக்கிறோம்.

அதைப்பற்றி கவிதை எழுதுறது – மேடையிலே பேசுறது – நாடகம் – சினிமா... இப்படி எல்லாத்திலேயும் அன்பைப் பற்றி அதிகமா சொல்லிக்கிட்டிருக்கோம்.

அன்பை பற்றி ஒண்ணுமே தெரியாதவன் எழுதுகிற கவிதை.

அதைப் பற்றி நல்லாத் தெரிஞ்சவன் எழுதுகின்ற கவிதையை விட நல்லாவே இருக்குமாம்.

ஏனென்றால் தெரியதவனிடம் இருக்கின்ற வெறுமை ஆழமானது.

அதை அவன் வார்த்தை ஜாலங்களாலே நிரப்ப முயற்சி பண்ணுறான்.

அதனாலே அன்பென்றால் என்ன என்பதை முதலிலே நல்லா புரிஞ்சிக்கணும்.

ஓஷோ என்ன சொல்லுகிறார் என்றால்...

நாம் அன்பு என்று நினைச்சிட்டிருக்கிறது உண்மையிலேயே அன்பு கிடையாதாம். அது அன்பின் பொய்த் தோற்றம் என்கிறார் அவர்.

முதலிலே இந்தப் பொய்த் தோற்றத்தைப் புரிஞ்சிக்கணும்.

இப்ப உதாரணத்துக்கு ஒருத்தர் இன்னொருத்தரை நேசிக்கிறாரென்று வைத்துக் கொள்ளுவோம்... நேசிக்கப்படுகிறவர் முழுமையா இவர் வசம் வந்துட்டாரென்றால் அந்த நேசிப்பு சீக்கிரம் இறந்து போய்விடும்.

ஆனால் அந்த நேசிப்புக்குப் பல தடங்கல் ஏற்பட்டு அதை அடைய முடியாதபடி ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் அப்போது அந்த அன்பு தீவிரமடைகிறது.

அந்த அன்பு நிறைவேறாத ஒரு கட்டம் வந்தால் அது தெய்வீகக் காதல் ஆகுது!

அதனாலே ஒருத்தர் அன்பிலே அல்லது காதலிலே சுலபமாக ஜெயித்து விட்டால் அது சுலபமாக இறந்து விடும்.

அதை அடைவதற்கு தடைகள் அதிகமாயிடுதென்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது இவருடைய அகங்காரமும் அதிகரிக்குது.

அதை அடையாமல் விடமாட்டேன் என்கிற ஆணவம் வந்து விடுகிறது. அப்போது இவருக்கு அகங்காரமும் இறுக்கமும் ஏற்படுகிறது.

இந்த இறுக்க நிலையைத்தான் "அன்பு அல்லது காதல் என்று இப்போது சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

ஆக இப்போது நாம "காதல்" என்று நினைச்சுக்கிட்டிருக்கிறது உண்மையிலே "காதல்" இல்லை. அது முட்டாள்தனமான அகங்காரத்தின் வெளிப்பாடு.

அது ஒரு இறுக்க நிலை போராட்டம் மற்றும் வேறுபாட்டு நிலை. இதைத் தெளிவாக புரிந்து கொள்ளனும் என்கிறார் அவர்.

நம்முடைய முந்தைய மனிதக் சுவட்டம் ரொம்பவும் தந்திரமா அன்பை நிலைப்படுத்த சில வழிகளைக் கையாண்டு இருக்கிறது.

அன்புக்குரியவர்கள் ஒருத்தரை ஒருத்தர் நீண்டநாள் பார்க்காமல் இருந்தால் மனசுக்குள் ஒரு வெறி ஏற்படுகிறது. அதனாலே இப்படி இடைவெளிவிட்டு சந்திக்கிற மாதிரியான சந்தர்ப்பங்களை ஏற்படுத்துகிறது.

உண்மையான அன்பு மிகவும் அமைதியான நிலையிலே ஏற்படுகிறது. அங்கே கோபத்துக்கோ வெறுப்புக்கோ அல்லது கவர்ச்சிக்கோ இடம் கிடையாது.

இன்னும் சொல்லப்போனால் உண்மையிலேயே அங்கே அன்பும் கிடையாது வெறுப்பும் கிடையாது.

ஏனென்றால் அந்த அன்பு அடுத்தவர்களைச் சார்ந்து இருக்கிறதில்லை. இதுதான் பெரியவர்கள் சொல்கிற அன்பின் விளக்கம்.

இந்த அன்புக்கும் நமக்கும் இப்போதைக்கு எந்தச் சம்பந்தமும் இல்லேன்னு தான் தோணுது.

கடற்கரையிலே ஒரு பெண் தன்னுடைய காதலனிடம் சொன்னாளாம்...

"இதோ பாருங்க... நீங்க என்மேலே இவ்வளவு அன்பு வைச்சிருக்கிறது எங்க அப்பாவுக்குத் தெரிந்துவிட்டால் அவ்வளவுதான்!"

"உடனே நம்ம ரெண்டு பேருக்கும் கல்யாணம் பண்ணி வைத்திடுவார்!" என்றாளாம் அந்தப் பொண்ணு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## மூங்கில் அரிசி







**Botanical Name:**
**Bambusa arundinaceae**
**Family: Bambusaceae**
**Engl: Bamboo Rice**
**Sinh: Katu- una**

மூங்கில் அரிசியானது சித்த மருத்துவத்தில் மிகவும் ஆரோக்கியமான சிறந்த ஊட்டச்சத்துக்கள் நிறைந்த தானிய உணவும் மருந்துமாகும்.

மூங்கில் மரமானது 40-60 வருடங்கள் வரை வளர்ந்து அதன் ஆயுட்காலம் முடியும் தருணத்தில்தான் அரிதாக பூத்துக் குலுங்கும். இப்பூக்களிலிருந்து காய்கள், கனிகள் உருவாகி விதைகளாக மூங்கில் நெல் நிலத்தில் சொரியும். இந்நெல்லிலிருந்தே மூங்கில் அரிசி பெறப்படுகிறது. இவை மூங்கில் மரங்கள் நிறைந்த காடுகளில்தான் அதிகமாக நிகழும். எமது பழங்குடி மக்களின் ஆரோக்கியத்திற்கும் நீண்ட ஆயுளுக்கும் மூங் கில் அரிசி பாவனைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

மூங்கில் அரிசியானது உடலிலுள்ள விஷக்கிருமிகளை அகற்றக்கூடியது. வாத, கப தோசங்களால் ஏற்படும் நோய்களைநீக்கவல்லது. குருதியழல் நோய், இடைவிடாத காய்ச்சல், கண்நோய் இவைகளை நீக்கும். உடலைத் திடகாத்திரமாகப் பேணக்கூடியது. உடலுக்குப் பலத்தையும் கொடுக்கும்.

உதிரபித் தந்தீர்க்கும் ஓங்கு சுரத் திற்கும்
அதிரவரு கண்ணோ யதற் கும்- புதிதாய்க்
கஞ்சிசெய்ய லாகுங் கரு திற் சிற் றுண்டியுமாஞ்
செஞ்சிலம்பார் மூங்கில் அரிசி

இதன் அரிசியை ஏழைமக்கள் வேறு உணவின்றி பசியால் வருந்துங்கால், சமைத்துச் சாப்பிடுவது வழக்கம். ஆகவே இதை பஞ்சங்காக்கும் அரிசி எனக்கூறுவதுமுண்டு.

வேயரி சியிலடு வெண்சுதை சர்க்கரைப்
பாயாச முண்டிடப் பல்பிணி யுங்கெடும்

மூங்கிலரிசியை வெண்பொங்கலாகவும் சர்க்கரை கூட்டிப் பாயாசமாகவும் செய்துண்ண அவை உடலுக்கு ஊட்டம் கொடுத்து நோய்களை அணுகவொட்டாமல் செய் யும்.

அரிசியை உணவுவகைகள் செய்து உண்பது வழக்காகும். நீரிழிவு நோயாளர்களுக்கு இது தக்க உணவாகும். சீனிச் சத்தையும் குறைக்கும். மூங்கில் பூத்து அரிசி விளைவது என்பது மிகவும் அரிதானதாகும். இதனால்தான் மூங்கில் அரிசி மிகவும் விலையானது. மெல்லிய இனிப்புச் சுவையுடையது. மூங்கில் அரிசியானது சுவாசக்குழாய் சம்பந்தப்பட்ட நோய்களுக்கும் சிறந்தது. இதில் அதிகளவு புரதச்சத்து உள்ளது. இடுப்பு வலி, கழுத்துவலி, மூட்டு வலியை போக்கக்கூடிய தன்மையும் உண்டு.

மாதவிடாய்ச் சிக்கலை யும் நீக்கக்கூடியது. கிளைசீமிக் இன்டெக்ஸ் குறைவாக உள்ளதால் இரத்தத்தில் சீனியின் அளவையும் கொலஸ்ட்ரோலின் அளவையும் சீராக வைத்திருக்கக்கூடியதாக உள்ளது. கல்சியம், உயிர்ச்சத்து B தன்மையும் உள் ளது. பசியைக் கட்டுப்படுத்தும். வாரத்தில் 2 நாட்கள் மூங்கில் அரிசியைப் பயன்படுத்தலாம்.

உடலிலுள்ள ஊளைச்சதையை குறைக்கக்கூடியதுமாகும். எவ்விதமான வாதவலிகளை நீக்கக்கூடியதான வலி நிவாரணி அரிசி மூங்கில் அரிசியாகும். அத்துடன் மூட்டுக்களையும் பலப்படுத்தக்கூடியதுமாகும். மூங்கில் மரத்திலிருந்து நிறையளவு ஒட்சிசன் வெளிப்படுவது முக்கிய அம்சமாகும். மூங்கில் அரிசிமா, தினைமா, சாமையரிசி மா மூன்றையும் சம அளவு எடுத்து கஞ்சி காய்ச்சி எடுத்தால் நீரிழிவு, அதிகரித்த கொலஸ்ட்ரோல் கட்டு ப்படும்.

### மூங்கில் அரிசிக்கூழ்

மூங்கில் அரிசியும் கோதுமை அரிசியும் உருவ அமைப்பில் கிட்டத்தட்ட ஒரே மாதிரி இரு க்கும்.

மூங்கில் அரிசியை கடையில் வாங்கி அதனை நீரில் களைந்து வெயிலில் உலர்த்திய பின்பு பயன்படுத்தவும்.

ஒரு கப் மூங்கிலரிசியை மிக்ஸியில் போட்டு எடுத்து, ஒரு பாத்திரத்தில் நீர்விட்டு இந்த மாவை நன்கு கரைத்து, அடுப் பேற்றி எரிக்கவும். கூழ் 15 நிமிடங்கள் ஆகும். தேவையான அளவு உப்பும் சேர்த்து கிளறிக்கொண்டே இருக்கவேண்டும். பின்பு இறக்கி ஓர் இரவு ஆறவிட்டு மறுநாள் காலை சாப்பிடலாம்.

சாப்பிடும்போது சிறிதளவு புளிக்காத தயிரும் சின்ன வெங்காயம், பச்சைமிளகாய் அரிந்ததைச் சேர்த்து பருகவும். இதில் நார்ச்சத்து அதிகளவு இருப்பதால் கொழுப்பைச் சேரவிடாது, பசி எடுக்காது.

இதில் மக்னீசியம், கல்சியம், நாகச்சத்து, செம்புச்சத்து, தயமின் ரிபோபிளேவின் அதிகளவு உண்டு. என்புகளைப் பலப்படுத்தும். கழுத்துவலி, இடுப்பு வலி இருப்பவர்களுக்கு இது சிறந்த உணவாகும். உயிர்ச்சத்து B6 காணப்படுவதும் குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

### மூங்கில் அரிசிக் கஞ்சி

ஒரு டம்ளர் மூங்கில் அரிசி,
அரை டம்ளர் பாசிப்பருப்பு/ பச்சைப்பயறு.

மூங்கில் அரிசியை 8 மணி நேரமும் பாசிப்பருப்பை 15 நிமிட நேரமும் நீரில் ஊறவிட வேண்டும். அடுப்பில் பாத்திரம் வைத்து மூங்கில் அரிசியையும் பாசிப்பருப்பையும் போட்டு 4 டம்ளர் அளவு நீர்விட்டு 1/4 தேக்கரண்டி மிளகு, கறிவேப்பிலை, 1/2 தேக்கரண்டி சீரகம், 1/2 தேக்கரண்டி தட்டிய இஞ்சி, தேவையான அளவு உப்புச் சேர்த்து அவியவிடவும். வெந்ததும் இறக்கிக் கொள்ளவும்.

மூங்கில் அரிசியை நீரில் ஊறவிட்டால் இலகுவில் கஞ்சி வெந்திடும். வெந்ததும் சிறிது தேங்காய்ப்பால் சேர்க்கலாம். சிறுவர்களுக்கும் கொடுக்கலாம். கர்ப்பிணித்தாய்மார், பாலூட்டும் தாய்மாருக்குச் சிறந்த போசாக்கான உணவாகும்.

பரிமாறும்போது சிறுவர்களுக்கு ஒரு டம்ளர் கஞ்சிக்கு 1/4 தேக்கரண்டி நெய் சேர்க்கலாம். வாரத்தில் மூன்று நாட்கள் காய்ச்சி எடுக்கலாம்.

### மூங்கில் அரிசி பானம்

மூங்கில் அரிசி-100 கிராம், கசகசா-100 கிராம், பாதாம் பருப்பு-20 கிராம், தேன்/ சர்க்கரை- தேவை யான அளவு, கஜு (முந்திரிப்பருப்பு)-20 கிராம், காய்ச்சிய பசுவின் பால்

ஒரு வாணலியில் மூங்கில் அரிசியை கருகவிடாமல் பொரித்து எடுக்கவும். பின்பு கசகசாவையும் பொன்னிறமாகப் பொரித்து எடுக்கவும். ஆறவிட்டு பின் தனித்தனியாகப் பொடித்து எடுத்துக் கொள்ளவும். பின்பு பாதாம்பருப்பையும் கஜுவையும் வறுத்து எடுக்கவும். பாதாம் பருப்பையும் முந்திரிப்பருப்பையும் பொடித்து வைத்துக் கொள்ளவும்.

சட்டியை அடுப்பேற்றி பாலைச்சூடாக்கி ஒரு தேக்கரண்டி மூங்கில் அரிசி பொடி, ஒரு தேக்கரண்டி கசகசா பொடி சேர்த்துக் கட்டிபடாமல் பாலில் வேகவிடவும். கரண்டியால் கிளறிவிட வேண்டும்.

பாதாம்பொடி, முந்திரிப் பருப்புப் பொடி, சிறிதளவு நீரும் சேர்த்து கலக்கி பின் சர்க்கரை அல்லது கருப்பட்டி அல்லது தேன் கலந்து பருகவும். நீரிழிவு நோயாளர்கள் சர்க்கரையைத் தவிர்த்துக் கொள்ளவும். ஆண்களுக்கு விந்தணுக்களின் இயக்கம் குறைவாக இருப்பவர்களுக்கு சிறந்த பலனைக் கொடுக்கும். நரம்புத்தளர்ச்சியை நீக்கும். உடலுக்குப் பலத்தைக் கொடுக்கக்கூடியது. சிறந்த தானிய பானமாகும்.

### மூங்கில் அரிசி பாயாசம்

மூங்கில் அரிசியை மிக்சியில் போட்டு அரவல் நொருவலாக்கி 2, 3 தடவைகள் நீரில் நன்கு கழுவி பின்பு 5 மணி நேரம் நீரில் ஊறவிடவும். பின்பு ஒரு பாத்திரத்தில் அரிசியைப் போட்டு ஒரு கப்பிற்கு 5 கப் வீதம் நீர்விட்டு அடுப்பேற்றி வெந்ததும் தேவையான அளவு முந்திரிகை வற்றல், முந்திரிப் பருப்பு, 3 ஏலக்காய், பால் ஒரு டம்ளர், நெய் தேவையான அளவு

சர்க்கரையை நீரில் கரைத்து பாகாக்கி அதையும் சேர்த்து பாயாசம் காய்ச்சுவது போல் காய்ச்சி எடுத்துக் கொள்ளவும். சர்க்கரைக்குப் பதில் கல்லாக்காரம் அல்லது பனைவெல்லம் சேர்த்தால் இன்னும் உடற்பலத்தைக் கொடுக்கும்.

நெய்யைச் சூடாக்கி முந் திரி வற்றல், முந்திரிப்பருப்பு போட்டு பொரித்து சேர்க்கவும். பின் சர்க்கரைப் பாகில் வெந்த அரிசி, மேற்படி பொரித்தவற்றையும் சேர்த்து வறுத்த தேங்காய்த் துருவலும் சேர்த்து ஏலத்தையும் பொடித்துப் போட்டு இறக்கவும். கர்ப்பிணித்தாய் மார், பாலூட்டும் தாய்மார், உடற் பலவீனமடைந்தவர்கள், மூட்டுவலி, இடுப்புவலி உடையவர்கள் வாரத்தில் இரண்டு நாட்கள் காய்ச்சி பருகலாம்.

எமது மக்களிடையே ஆரோக்கியமான, பாரம்பரிய தானிய உணவுகளின் பாவனை மறந்தும், மறைந்தும் போவது கண்கூடு. எனவே விரைவுணவுகளைத் தவிர்த்து ஆரோக்கியமான இயற்கை உணவுகளின் பாவனை எமது ஆரோக்கியத்திற்கு அத்தியாவசியமாகும்.

### மூங்கில் அரிசி பொங்கல்

மூங்கில் அரிசியை 5 மணி நேரம் ஊறவிட்டு ஒரு கப் எடுத்துக்கொள்ளவும். அதற்கு 1/4 கப் பாசிப்பயறு 15 நிமிட நேரம் நீரில் ஊறவிட்டு வடித்து ஒரு பானையில் 5 பங்கு நீர் விட்டு அரிசியையும் பயறையும் போட்டு நன்கு வேகவைத்து, ஒரு வாணலியை அடுப்பேற்றி வாணலி சூடானதும் பெருஞ்சீரகம், கறிவேப்பிலை, மிளகு போட்டு நெய்யில் வறுத்து வெந்த பொங்கலில் கலந்து கொள்ளவும். நார்ச்சத்து நிறைந்த இம்மூங்கில் அரிசிப் பொங்கலை நீரிழிவு நோயாளர்கள், இரத்தத்தில் கொலஸ்ட்ரோல் அதிகரித்தவர்கள், ஊளைச்சதை உடையவர் கள் பயன்படுத்தலாம். தேவையான உயிர்ச்சத்துக்களும் கனியுப்புக்களும் நிறைந்தும் காணப்படும். மூங்கில் அரிசியில் அமினோஅமிலமும் காணப்படும். மூங்கில் அரிசி உணவு களை எடுக்கும்போது நோய் எதிர்ப்பாற்றல் அதிகரிக்கும்.

மூங்கில்அரிசியானது இயற்கையின் அற்புதக்கொடை மூங்கில் அரிசி உடலுக்கு ஏராளமான ஊட்டச்சத்தை வழங்கும். வாரத்தில் இரண்டு முறை மூங்கில் அரிசியை பொங்கலாகவோ அல்லது கஞ்சியாகவோ செய்து சாப்பிட்டுவர உடலிலுள்ளதேவையற்றகொழுப்புக்கள் கரைக்கப்படுகிறது. பசியைக் குறைக்கும். உடலில் ஆற்றலைப் பெருக்கும். கஞ்சி, பொங்கல், பாயாசம், பானம் மட்டுமல்ல மூங்கிலரிசியிலிருந்து இட்லி, தோசை போன்றன தயாரித்தும் பயன்படுத்தலாம்.

குறிப்பு: மூங்கில் அரிசி யாழ்ப்பாண தமிழ் மருந்துக் கடைகளில் பெற்றுக் கொள்ளலாம்.




டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைகளின் காணி அதிகாரங்கள் பற்றிய சர்ச்சை - ஒரு தொகுப்பு

26

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



இவையெல்லாம் மத்திய அரசின் (மையப்படுத்தப்பட்ட) அத்து மீறல்களின் அளவையும், அரசியலமைப்பு ரீதியாக வழங்கப்பட்ட அதிகாரப்பகிர்வில் தலையிடுவதையும் காட்டுகின்றன. இதேபோல் இது அரசியலமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய காணிக் கொள்கை உருவாக்கும் பொறிமுறையையும் பாதித்தது.

**கருத்தில் கொள்ளப்பட வேண்டிய முன்மொழிவுகள் சில...**

அரச காணிகளின் அடிப்படைகள் பொதுமக்களுக்குத் தெரியாது. இதேபோல், அவர்களுக்கு அதிகாரப்பகிர்வு மற்றும் மையமயமாக்கல் சம்பந்தமான அறிவில்லாத இருட்டில் உள்ளனர். காணி அதிகாரங்கள் மாகாண சபைகளுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டால் என்ன பகிரப்படாவிட்டால் என்ன அவர்கள் பல ஆண்டுகளாக அதே அளவு அல்லது அதற்கு மேற்பட்ட அநீதிகள், ஆதரவுகள், அரசியல் தலையீடுகள், ஊழல் போன்றவற்றை எதிர்கொள்கிறார்கள். நான் ஒரு முன்னாள் காணி நிர்வாக அதிகாரி என்ற முறையில் இவை எல்லாம் எல்லா அரசியல் ஆட்சிகளின் கீழும் நடப்பதை கண்டிருக்கிறேன்.

காணி அதிகாரப்பகிர்வு குறித்த தற்போதைய உரையாடலின் பற்றாக் குறையானது அரசியல் வாதிகள் தவிர மற்றைய எல்லா மட்டங்களிலும் பொதுமக்களிடமும் இந்த பிரச்சினையில் உள்ள குறுகிய புரிதலையும் அக்கறையையுமே காட்டுகிறது. காணி அதிகாரப்பகிர்வுக்கான காரணத்தில் ஆர்வமுள்ளவர்கள் பெரும்பாலும் அரசாங்கத்தில் உள்ள அரசியல் வாதிகள் மற்றும் தமிழ் குழுக்கள்தான். இவர்கள் தான் காணி அதிகாரங்களைப் பகிர்வதால் அல்லது பகிர்ந்து கொள்ளாததால் பாதிக்கப்பட்ட குழுக்களாகும். காணி அதிகாரப்பகிர்வை நிராகரிக்கும் அல்லது மறுக்கும், சந்தர்ப்பவாத அரசியல் பாராளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரப்பகிர்வு மூலம் அதிக அதிகாரத்தைப் பெறவிரும்பும் மாகாண சபைகளில் உள்ளவர்கள் எல்லோரும் தங்கள் இதய சுத்தியுடன் பேசுகிறார்களா? என்பதையும் அல்லது அவர்களின் நோக்கங்களின் நேர்மையையும் நான் சந்தேகிக்கிறேன். இவர்களின் இத்தகைய நடத்தை மூலம் இப்பிரச்சினை எவ்வாறு அரசியல் மயமாக்கியது என்பது நிரூபிக்கப்படுகிறது. எனவே, ஒரு முக்கியமான அரசியல் பிரச்சினையை மேசையில் தீர்த்து வைப்பதே கீழ்வரும் முனமொழிவுகளின் நோக்கம்.

அரசியல், சட்ட மற்றும் நிர்வாக முறைகளின் மேம்பாடுகளுக்கு இடமளித்து, இந்த சிக்கலான நிலையிலிருந்து வெளியேறுவதற்கான வழியை நான் படிப்படியாகக் கூறலாம் என்று எண்ணுகிறேன்.

1) பாராளுமன்ற ஒப்புதலின் பேரில், தேசிய காணிக் கொள்கையை வகுப்பதற்கு 13 ஆம் திருத்தத்தின் பின்னிணைப்பு II இன் பிரிவு 3.2 இன்படி தொழில்நுட்பச் செயலகத்தையும் பின்னிணைப்பு II இன் பிரிவு 3:1 இன் தேவைகளுக்கு ஏற்ப தேசிய காணி ஆணைக் குழுவையும் அரசு நிறுவ முடியும். இச் செயற்பாட்டின் பிரகாரம் காணிச் சிக்கல்களுக்கு முடிவு காண முடியும்.

2) தேசிய காணி ஆணைக் குழு பலம் மற்றும் பல வீனங்களை அடையாளம் காண ஆரம்பத்தில் தற்போதைய தேசிய காணிக் கொள்கைகளையும் அவற்றின் செயற்படுத்தல் நிலையையும் மறுபரிசீலனை செய்ய வேண்டும். இதன்மூலம் அதிகாரப் பகிர்வுக்கான அச்சுறுத்தல்களையும் மேலும் மேம்பாடுகளுக்கான வாய்ப்புகளையும் கண்டறிய வேண்டும்.

3) அரச காணி பயன்பாடு, அரச காணியை விடுவித்தல், அரச காணியைப் பராதீனம் செய்தல், அரச காணியை கையுதிர்தல் மற்றும் செயல்முறைகள் ஆகியவற்றில் மீளாய்வு அல்லது திருத்தங்கள் செய்ய வேண்டிய பகுதிகளை மேற்கண்ட பயிற்சிகளிலிருந்து அரசாங்கம் கண்டறிய வேண்டும். தேசிய காணிக் கொள்கை இந்த விவாதங்களின் விளைவாக இருக்க வேண்டும் மற்றும் ஒரு வேளை தேசிய காணி ஆணைக்குவால் நிறுவப்பட்ட தொழில்நுட்ப செயலகத்தால் மேற்கொள்ளப்பட்ட தீவிர ஆய்வுகள் மூலமாக இருக்க வேண்டும், காணிக் கொள்கை தற்காலிக முடிவுகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதாக இருக்கக்கூடாது.

4) தேசிய காணிக் கொள்கை குறித்த ஒரு வெள்ளை அறிக்கை தேசிய காணி ஆணைக் குழுவினால் தயாரிக்கப்படல் வேண்டும், இவ் அறிக்கை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படு முன் மாகாண சபைகள் மற்றும் பாராளுமன்ற ஆலோசனைக் குழுவில் விவாதிக்கப்படல் வேண்டும். கடந்த கால தலையீடுகள் குறித்து மேலே குறிப்பிட்டுள்ள பெரிய அளவிலான தகவல்களை இந்த வெள்ளை அறிக்கை தயாரிப்பதில் பொருத்தமானவையாக பயன்படுத்தப்படலாம். இந்தச் செயல்முறையானது கொள்கை வகுப்பிற்கான 13 ஆம் திருத்தத்தின் நிரல் II முன்னுரையின் அரசியலமைப்புத் தேவையை பூர்த்தி செய்து, அமைச்சரவை மாகாணாங்களுக்கு இரண்டாம் நிலை என்று சந்தேகிக்கப்படும் எதிர்மறையான கருத்தை (தடுப்பை) அழிக்கும்.

5) தேசிய காணிக் கொள்கையை அதன் உருவாக்கம் முதல் நடைமுறைப்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் மறு ஆய்வு செய்தல் வரை மோதல்கள் அதிகபட்சமாக குறைக்கப்படுவதை உறுதி செய்வதற்கும், பொதுவான காணி நிர்வாகச்சட்டத்தை உருவாக்குவதற்கு ஆதரவளிப்பதற்கும் சட்டமா அதிபர் பக்கச்சார்பற்ற முறையில் அவதானிப்பதோடு தேசிய காணி ஆணைக் குழுவிற்கு தனது ஆலோசனைகளை வழங்குவதன் மூலம் அரசாங்கம் மற்றும் மாகாண சபைகளின் மனதில் உள்ள சந்தேகங்களை சமநிலைப்படுத்தி அழிக்க வேண்டும். மேலும் சட்டமா அதிபர் திணைக்களத்தில் உள்ள மூத்த பிரதிநிதி இந்த தொழில்நுட்ப செயலகத்திற்கு முழுநேர அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டும் அல்லது குறைந்தபட்சம் தேசிய காணி ஆணைக் குழுவிற்கு உதவ பரிந்துரைக்கப்பட வேண்டும்.

6) தேசிய காணிக்கொள்கையை செயற்படுத்துவதில் நிகழும் முன்னேற்றம் அல்லது செயற்பாடு வேறு திசையில் செல்லல் அல்லது ஏற்படும் மாற்றங்கள் அல்லது செயற்பாட்டின் விலகல்களை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்வதன் மூலம் இது தேசிய காணி ஆணைக் குழுவிற்கு ஒரு தொடர்ச்சியான மற்றும் தொடர்ச்சியான பயிற்சியாகத் தொடர வேண்டும். மேலும் இதனை ஒரு திறமையான மற்றும் பயனுள்ள வேலைச் செயல்முறையாக மாற்றுவதற்கு தேவையான திருத்தங்கள் மற்றும் மீளாய்வுகள் முன்மொழியப்படல் வேண்டும். எதிர்காலக் கொள்கை மற்றும் செயற்படுத்தல் திருத்தங்கள் தேவைப்படும் பகுதிகள் குறித்து தேசிய காணி ஆணைக்குழு, அரசாங்கத்திற்கு (அதாவது அமைச்சரவைக்கு) ஆலோசனை வழங்கும், தேவைக் கேற்ப சட்ட மற்றும் செயற்பாட் டுத்திருத்தங்களை அமைச்சரவை தீர்மானிக்க வேண்டும்.


காணி சம்பந்தமான இந்தப் பிரச்சினை ஒரு காகிதத்தில் ஒருவர் முன்வைக்கக் கூடிய அளவுக்கு எளிதானது அல்ல. இது மிகவும் தீவிரமான சட்ட, அரசியல், சமூக-பொருளாதார மற்றும் நெறிமுறை சார்ந்த பிரச்சினை ஆகும். இருப்பினும், மாகாண சபைகளுடன் காணி நிர்வாக அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதில் அரசாங்கம் ஆர்வமாக இருந்தால், இம்முன்மொழிவுகள் ஆரம்ப நடவடிக்கைகளாகக் கருதப்படலாம். மேலும் இவை அணுகுமுறைகள் மற்றும் செயல்களை மாற்றுவதற்கான அடித்தளமாக இருக்கலாம். 13 ஆவது திருத்தத்தின் முடிவுகளை அடைய வேண்டுமானால் சம்பந்தப்பட்டவர்கள் சமரசங்களை எட்ட வேண்டும் என்பதை ஒவ்வொருவரும் அறிய வேண்டும்.

அதிகாரப்பகிர்வு வாதிகள், தமிழ் அரசியல்வாதிகள், குறிப்பாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் அல்லது அதிகாரப் பகிர்வை எதிர்க்கும் சில மத்திய சார்பு கருத்துரை வாதிகள் மற்றும் தெற்கு அரசியல் வாதிகள் இறாத்தலில் இறைச்சியைக் கோருவது போல் இதனை அடைய முடியாது. “கொடுங்கள் மற்றும் எடுத்துக் கொள்ளுங்கள்” என்ற மனநிலையில் அணுக வேண்டும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டாரில் இருந்து நாடு கடத்தப்பட்டவர் கைது



(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பை ஊக்குவித்த குற்றச் சாட்டுக்காக .41 வயதுடைய நபர் ஒருவர் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை பகுதியைச் சேர்ந்த அவர், 2019 ஆம் ஆண்டு கட்டாருக்கு தப்பிச் சென்றுள்ளதாகவும், பின்னர் அவரை கைது செய்ய இன்டர்போல் நீல நோட்டீஸ் அனுப்பப் பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்படி சந்தேக நபர் கட்டாரில் கைதுசெய்யப்பட்டு, இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளார்.


தற்சமயம் சந்தேக நபர் முள்ளியவளை தனிமைப்படுத்தல் முகாமில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

## தீர்க்க சுமங்கலி வரம் அருளும் காரடையாள் நோன்பு



### வைக்கோலுக்கு மரியாதை

காரடையான் நோன்பில் காரரசி மாவும், காராமணி அல்லது துவரையும் கலந்த அடை செய்து நைவேத்தியமாக படைக்கப்படும். அடை தயாரிக்கப்படும் போது, வாணலியின் அடியில் வைக்கோல் போட்டு, மேலே தட்டில் அடையை வேக வைப்பார்கள். நெல் கதிரில் இருந்து பிரியும் வரை வைக்கோல் நெல்மணியை காத்து இருக்கும்.

அதைப்போல் சத்தியவான் உடலில் இருந்து உயிர் பிரிந்தவுடன், 'உயிரை மீட்டுக் கொண்டு வரும் வரை, உடலை காத்திரு!' என்று சாவித்திரி சொல்லி விட்டு, வைக்கோலால் சத்தியவான் உடலை மூடி விட்டு சென்றாள். அதன் நினைவாக தான் வைக்கோல் போடுகிறோம். இந்த விரதத் தால் பிரிந்த தம்பதியர் கூடுவர். கணவரின் ஆயுளும் ஆரோக்கியமும் அதிகரிக்கும்.

### பார்வதி தேவி செய்த சிவலிங்க பூஜை

பிரிந்து இருக்கும் கணவன், மனைவியை ஒன்று சேர்த்து வைக்கும் வல்லமை காரடையான் நோன்பிற்கு உண்டு. இது மனிதர்களுக்கு மட்டுமல்ல. தெய்வங்களுக்கும் கூட பொருந்தும்.

ஒருமுறை கயிலாயத்தில் அம்பாள் சிவபெருமானின் திருக்கண்களை விளையாட்டாக பொத்தினாள். ஆதியும், அந்தமுமான அருட்பெருட்ஜோதியான பரமேஸ்வரனின் கண்கள் மூடப்பட்டதால் உலகம் முழுவதும் இருள் சூழ்ந்தது.

இந்த பாவம் உமாதேவியை அடைய அவள் உருவம் மாறுகிறது. பாவ விமோசனத்துக்காக அன்னை காஞ்சிபுரம் வந்து ஆற்றங்கரையில் மண்ணினால் சிவலிங்கம் செய்து பூஜை செய்தார்.

அப்போது சிவபெருமான் திருவிளையாடலால் ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து வந்தது. அருந்துணைவரான சிவலிங்கம் கரைந்து போகாமல் காக்க காமாட்சி அம்மன் காரடையான் விரதத்தை மேற்கொள்கிறார்.

இந்த விரதத்தை கண்டு மனம் மகிழ்ந்து சிவபெருமான் அன்னைக்கு தரிசனம் கொடுத்து காமாட்சியை மணந்து கொண்டார். காஞ்சி காமாட்சி அம்மன் இந்த விரதத்தை அனுஷ்டித்ததால் இந்த நோன்பிற்கு 'காமாட்சி அம்மன் விரதம்' என்றும் பெயர் உண்டு.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## ஐந்து மாடிக் கட்டடம் தாழிறங்கியது

(குருநாகல்)

குருநாகல் - கண்டி வீதியில் கடுகஸ்தோட்டை முச்சந்திக்கு 2 கிலோ மீற்றர் தொலைவில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற ஐந்து மாடிகளைக் கொண்ட வர்த்தக கட்டடமொன்று நேற்று முன்தினம் மாலை திடீரென கீழிறங்கியுள்ளதாக தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அதனால் மறு அறிவித்தல் வரை கடுகஸ்தோட்டை குருநாகல் வீதியில் கனரக வாகன போக்குவரத்திலிருந்து விலகியிருக்குமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கட்டடம் கீழிறங்கியமையினால் எவ்வித உயிரிழப்புகளும் பதிவாகவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

## உதவி பொலிஸ் பரிசோதகர்கள் 16 பேருக்கு பதவி உயர்வு

(கொழும்பு)

உதவி பொலிஸ் பரிசோதகர்கள் 16 பேருக்கு பொலிஸ் பரிசோதகர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இவ்வாறு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரச சேவைகள் ஆணைக்குழு மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் குறித்த பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. (நி-5)

## இலங்கைக்கான பயணத்தடை மேலும் நீடிக்கப்பட்டது

(கொழும்பு)

தீவிரமாக பரவிவரும் கொரோனாத் தொற்றுக் காரணமாக இலங்கை உட்பட 3 நாடுகளுக்கான பயணத் தடையை ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மேலும் நீடித்துள்ளது.

இதன்படி இலங்கை, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கான பயணத்தடையே நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த பயணத்தடை எதிர்வரும் 21ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலை


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 150 | 130 | 150 |
| பச்சைமிளகாய் | 160 | 180 | 200 | 200 |
| தக்காளி | 100 | 100 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 | 40 |
| கோவா | 160 | 160 | 160 | 200 |
| கரட் | 180 | 150 | 180 | 200 |
| பூசணி | 80 | 100 | 60 | 120 |
| புடோல் | 100 | 100 | 80 | 120 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 250 | 280 | 250 | 280 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 300 | 220 | 300 | 400 |
| வெண்டிக்காய் | 50 | 80 | 80 | 160 |
| கருணைக் கிழங்கு | 160 | 140 | 180 | 160 |
| பயற்றங்காய் | 200 | 140 | 180 | 120 |
| லீக்ஸ் | 200 | 190 | 200 | 200 |
| பீற்றூட் | 160 | 120 | 120 | 160 |
| கறிமிளகாய் | 280 | 240 | 220 | 280 |
| முருங்கைக்காய் | 250 | 400 | 250 | 400 |
| போஞ்சி | 170 | 180 | 160 | 240 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 100 | 100 |
| கீரை - 1 பிடி | 40 | 30 | 30 | 50 |
| தேசிக்காய் | 180 | 130 | 160 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 50 | 50-70 |
| இராசவள்ளி | 250 | 200 | 250 | -- |
| வெங்காயப்பூ | 260 | 140 | 250 | 320 |
| முள்ளங்கி | 100 | 100 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | 30 |
| வல்லாரை | 20 | 60 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 80 | 60 | 30 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## தேவதையின் தீர்ப்பு



பின் உறங்கச் சென்றான். ஆனால் உறக்கமே வரவில்லை. அடிக்கடி சென்று குடுவையில் பனித்துளிகள் சேர்ந்துள்ளதா? எனப் பார்த்துக்கொண்டே இருந்தான்.

சீதாவும் அவளது வீட்டின் முன்புறம் உள்ள புல்தரையில் குடுவையை வைத்தாள். இடையிடையே பனித்துளியின் அளவைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"நாளை எப்படியாவது ரவியை ஜெயிக்கணும்' என்ற சிந்தனையிலேயே அவள் தூங்கிப்போனாள். மறுநாள் பொழுது புலர்ந்தது.

சீதாவும் ரவியும் சென்று அவரவர் குடுவையைப் பார்த்தனர். ஓரளவுக்கு இருவரது குடுவையிலும் பனி நிறைந்திருந்தது.

ஆனால் ரவியின் குடுவையில் இதை விட அதிகம் இருக்குமோ என்று சீதாவும், சீதாவின் குடுவையில் அதிகம் இருந்தால் என்ன செய்வது என்று ரவியும் நினைத்தனர்.

மதியத்துக்கு மேல் இருவரும் மைதானத்துக்கு தேவதையைப் பார்க்கக் கிளம்பினர்.

அப்போது மற்றவரது குடுவையில் அதிகமாக இருந்தால் நாம் தோற்றுவிடுவோமே என்று இருவருமே நினைத்ததால், குடுவை நிறையத் தண்ணீரை ஊற்றி எடுத்துச் சென்றனர். மைதானத்தில் ஒருவருடன் ஒருவர் பேசிக் கொள்ளாமல் குடுவையை மறைத்து வைத்தபடி காத்திருந்தனர். மாலை ஆனதும் தேவதை வந்தது. "சரியாக வந்து விட்டீர்களே! எங்கே உங்கள் குடுவையைக் காட்டுங்கள்" என்று குடுவைகளை வாங்கிப் பார்த்தது.

பின்னர் வாய் விட்டுச்சிரிக்க ஆரம்பித்தது தேவதை. இதைக் கண்ட இருவரும் புரியாமல் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். பின்பு ரவி கேட்டான், "ஏன் இப்படிச்சிரிக்கிறீங்க?" என்று.

(தொடரும்)

# மகாபாரதம்




நம்மிடம் பகை கொண்டு நம்மை அழிப்பதே அவன் இலட்சியமாக இருந்தது. நமது பெருமையைக் கண்டு பொறாமை கொண்ட அவன் உடல் வெளுத்துக் காணப்பட்டான்.

இதை சகுனியே திருதராட்டிரனிடம் சொல்லியிருக்கிறான். துரியோதனன் மீது கொண்ட பாசத்தால் யார் பேச்சையும் கேட்காமல் துரியோதனன் மனம் போனபடி போக வழிவிட்டார்.

பீஷ்மரின் பேச்சையும் விதுரருடைய பேச்சையும் கேளாமல் மகனின் மனம் போல செயல்பட்டான்.

கெட்ட புத்தியுள்ள துரியோதனன் பழிபட செயல் புரிந்து உடன் பிறந்தவர்களைக் கொல்வித்தான்.

தாய், தந்தையரைச் சோகத்தில் ஆழ்த்தி[illegible]னான். கண்[illegible] கடுஞ்சொற்களால் ஏசினான்.

யார் செய்த பாவமோ. நாடு அழிந்தது. பல்லாயிரம் வீரர்கள் மடிந்ததும் நம் கோபம் அகன்றது. ஆனால் இப்போது சோகம் வாள் கொண்டு பிளக்கிறது. நாம் செய்த பாவம் தான். சகோதரர்கள் அழிவுக்குக் காரணமோ என அஞ்சுகிறேன்.

இந்தப் பாவம் தவத்தினால் போகக்கூடியது என ஆகமங்கள் கூறுகின்றன.

ஆதலால் நான் தவக்கோலம் பூண்டு காட்டிற்குச் செல்ல விரும்புகிறேன்.

இல்லறத்தில் இருந்து கொண்டு நாம் செய்யும் செயல்கள் மீண்டும் பிறப்பு, இறப்புக் காரணம் என அறநூல்கள் கூறுகின்றன.

ஆகவே சுக துக்கங்களைத் துறந்து சோகமில்லா ஓரிடத்தை நாடிச் செல்ல விழைகிறேன். தவம் ஒன்றே நம் பாவங்களை சுட்டெரிக்கும் என உணர்கிறேன்.

ஆகவே அருச்சுனா இந்த பூமியை நீயே ஆட்சி செய் எனக்கு விடை கொடு" என்றார்.

தருமரின் மொழிகளைக் கேட்ட அருச்சுனன் பதில் கூற ஆரம்பித்தான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> இன்பம் உங்களுடைய அகங்காரத்தை அப்புறப் படுத்தி விடும். மாறாக, துன்பம் உங்களிடம் வலுவான அகங்காரத்தை ஏற்படுத்தும்.
>
> – ஓஷோ ரஜனீஷ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# அறுகின்ற நாளைக்கு எழுவது அகந்தை!

கச்சியப்ப சுவாமிகள் அருளிய கந்தபுராணம் தமிழ் உலகுக்குக் கிடைத்த மிகப்பெரும் தெய்வீக நூல்.

ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலம் அறுத்து தெய்வீகப் பெருநிலையை மானிடம் அடைவதற்கான ஞானநூல் கந்தபுராணம் எனலாம்.

கந்தபுராணத்து வழிநிலையில் அனுஷ்டிக்கப்படும் கந்தசஷ்டி விரதத்தை நினைத்துப் பார்ப்பதற்குக்கூட ஆன்ம பலம் வேண்டும்.

அந்தளவுக்கு கந்தசஷ்டி விரதம் ஊன் உருக்கி உள்ளொளி பெருக்கவல்லது.

கச்சியப்பசுவாமிகள் அருளிய கந்தபுராணத்தின் சாராம்சம் யாது? என்று கேட்டால், அகந்தை கொண்டோர் அழிவர் என்பதை எடுத்துரைக்கும் தத்துவம் எனலாம்.

சூரபன்மன் அகந்தை கொண்டு தேவர்களைத் துன்புறுத்துகிறான்.

சூரனின் கொடுமையைத் தாங்கமுடியாத தேவர்கள்; சிவன்பால் சென்று தங்களைக் காத்தருளுமாறு கேட்க, சிவன் ஆறுமுகக் கடவுளைத் தந்தருளி சூரனைச் சங்காரம் செய்து தேவர்களைக் காத்தருளக் கருணை புரிந்தான்.

உலகம் உய்யும் பொருட்டு உதித்த முருகன் சூரனுடன் போர் புரிகின்றான்.

போர் நடக்கும் கால், சூரனுக்குத் தன் திருப்பெருவடிவைக் காட்டுகிறான் முருகன்.

முருகப்பெருமானின் திருப்பெருவடிவம் கண்ட சூரன்; திகைத்து நின்று முருகா! என்று வணங்குகிறான்.

திருப்பெருவடிவைக் கண்டுற்றபோதும் அகந்தை அவனை விட்டகலவில்லை.

தான் யார் என்பதை சூரனுக்குத் திருப்பெருவடிவினூடாக முருகன் எடுத்துரைத்தானாயினும் அகந்தை அவனை விட்டு நீங்குவதாக இல்லை. அதனால் சூரசங்காரம் நடந்தாகிறது.

இங்குதான் ஒரு பெரும் தத்துவத்தை கந்தபுராணம் எடுத்துரைக்கிறது.

அதாவது அகந்தை கொண்டால் அது அழிவையே தரும்.

ஆட்சிப்பீடத்தில், அரச சபையில், முப்படைத் தளத்தில் என எந்தப் பதவியில் இருந்தாலும் அகந்தை கொண்டால் அழிவு உறுதி.

ஏன்? சர்வலோகத்தையும் ஆளும் இறைவனின் திருப்பெருவடிவத்தைக் கண்ணுற்றவராயினும் அவர் அகந்தை கொண்டு – செருக்கு மிகுந்து கர்ச்சிப்பாராயின் அது அவரின் அஸ்தமனத்துக்கு அறிகுறி என்பதை எடுத்துரைத்து மக்களை ஆற்றுப்படுத்தும் பணியை கந்தபுராணம் செய்தாகிறது.

இத்தத்துவத்தை உணர்ந்த நம் முன்னோர்கள் **அறுகின்ற நாளைக்கு எழுவது அகந்தை** என உபதேசித்தனர்.

ஆம், நான் இட்டதே சட்டம். என்னை எதுவும் செய்ய முடியாது என்பதெல்லாம் அகந்தையின் அடையாளங்களே!

# கொத்தலாவல பல்கலைக்கழக சட்டமூலம் இலவசக் கல்விக்கு பேரழிவை ஏற்படுத்தும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச

(கொழும்பு)

உத்தேச கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலம் இலங்கையின் இலவசக் கல்விக்கு பேரழிவை ஏற்படுத்தும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தேசியப் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கும் ஊக்குவிப்பதற்கும் தேவையான உயர் கல்வியை வழங்குவதற்காக சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தை மேலும் வலுப்படுத்த வேண்டியது தேசிய ரீதியிலான தேவையாக இருந்தாலும், அந்த அடிப்படை தேவைக்கு அப்பாற் சென்று இலவசக் கல்வியை அழிப்பதற்கு உயர் கல்வி கட்டமைப்பிற்கு அப்பால் ஒரு நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டதை வன்மையாகக் கண்டிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் இந்த செயற்பாடு மூலம் உயர் கல்வியின் பண்புகள், தரம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செல்வாக்கு முற்றாக இரத்தாகும் எனவும் அது இலவசக் கல்வியை பாரிய நெருக்கடிக்குள் தள்ளும் எனவும் சஜித் பிரேமதாச கூறியுள்ளார். (ம-3)

# எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைக்க மீளாய்வுக் குழு பரிந்துரை

தற்போதைய முறைமையின் ஊடாக உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் தேவையற்ற அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதால் எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலின்போது, இந்த எண்ணிக்கை ஆயிரத்தினால் குறைக்கப்பட வேண்டும் என யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

தேர்தல் முறைமை தொடர்பான ஆராய்வுகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவினால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவின் இறுதி அறிக்கையானது, அரச சேவைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சரிடம் நேற்று கையளிக்கப்பட்டது. அதற்கமைய, எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்களை இக்குழு பரிந்துரைத்துள்ளது. (ம-3)

# மின்சாரம் தடைப்படும்


உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக **நாளை 15 ஆம் திகதி** வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ். பிரதேசத்தில்** மயிலிட்டி வி.சி. வள்ளுவர்புலம் மயிலிட்டி, விமான நிலையம் பலாலி, ஆலடி சந்தி, இறுப்பிட்டி, கேரதீவு, குறிகாட்டுவான், மடத்து வெளி, நடுவுக்குறிச்சி, புங்குடுதீவு, அரசடி சந்தி, வல்லான் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** எல்லப்பர் மருதங்குளம், சமணங்குளம், குழுமாட்டுசந்தி, மறக்காறம்பளை- கணேசபுரம், ஜீவன் அரிசி ஆலை, சுஜன் அரிசி ஆலை காத்தான் கோட்டம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** கலசியம்பலாவ, கற்கடந்தகுளம், பெரிய நொச்சிக்குளம், சின்னதம்பனை, வீரபுரம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



## குருவும் சீடரும்

ம-: 'சுவாமி! இறைவனைக் காண முடியுமா?'

ஸ்ரீராமகிருஷ்ணர்: 'முடியும். நிச்சயமாக முடியும். அதற்கு அவ்வப்போது தனிமையில் வாழ வேண்டும். பகவானின் திருநாமத்தையும் மகிமைகளையும் பாட வேண்டும், பகுத்தறிந்து உணர வேண்டும். இந்த வழிகளையெல்லாம் பின்பற்ற வேண்டும்.'

ம-: 'சுவாமி, எந்த நிலையில் ஒருவன் இறைவனைக் காண முடியும்?'

ஸ்ரீராமகிருஷ்ணர்: 'ஆழ்ந்த மன ஏக்கத்துடன் அழுதால் அவரைக் காண முடியும். மனைவிமக்களுக்காக மக்கள் குடங்குடமாகக் கண்ணீர் வடிக்கிறார்கள், பணத்திற்காக அழுது புரள்கிறார்கள். ஆனால் கடவுளுக்காக யார் அழுகிறார்கள்? எப்படி அழைக்க வேண்டுமோ அப்படி அழைக்க வேண்டும்.'

இதைச் சொல்லிவிட்டு குருதேவர் பாடினார்

**மனமே தாயை மெய்யாக வருந்தி அழைத்தால் வாராமல்**
**தனியே உன்னை விடுவாளோ? சற்றே விலகிப் போவாளோ?**
**பிரிந்து காளி வாழ்ந்து நிற்கும் பேச்சும் உண்டோ? சிறுநெஞ்சே!**
**இருந்து வாழ்வாள் உன்னுடனே என்றும் அவளே துணையாவாள்.**
**மல்கும் நினைவு வேறின்றி மாதா பாதத் தாமரையில்**
**வில்வம் வைத்து செம்பருத்திப் பூவும் விழைந்து தூவுகவே!**
**சக்தித் தாயின் சரணத்தில் தழையும் மலரும் சூட்டுகையில்**
**பக்தி எனும் சந்தனத்தைப் பதமாய்க் கலந்து பூசுகவே.**

'மன ஏக்கம் வந்து விட்டாலே அருணோதயம் ஆகிவிட்டது. அதன்பிறகு கதிரவன் தன்னைக் காட்டியருள்வான். அதுபோல் மன ஏக்கத்திற்குப் பிறகு இறைக்காட்சி வருகிறது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு முகக்கவசத்தை உரிய முறையில் அணிந்தால் போதுமானது

## விளக்குகிறார் மருத்துவர் ரஞ்சித்

**(கொழும்பு)**

**ஒரே நேரத்தில் இரண்டு சத்திரசிகிச்சை முகக் கவசங்கள் அல்லது என் 95 முகக்கவசங்கள் இரண்டு அணிவது பொருத்த மற்றது என சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் இயக்குநர் மருத்துவர் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஒரு முகக்கவசத்தை சரியான முறையில் அணிவது மாத்திரமே அவசியமாகும்.

தாம் அணிந்திருக்கும் முகக்கவசம் உரிய முறையில் முகத்துடன் இறுக்கமாக இல்லை என யாராவது உணர்ந்தால் அவர்கள் தாங்கள் அணிந்திருக்கும் முகக் கவசத்திற்கு வெளியே ஒரு சாதாரண துணி முகக்கவசத்தை மாத்திரமே அணிய வேண்டும்.

ஒரே நேரத்தில் இரண்டு சத்திரசிகிச்சை முகக் கவசங்கள் அல்லது என் 95 முகக்கவசங்கள் இரண்டு அணிவது ஏற்கத்தக்கது அல்ல. உள்ளே ஒரு சத்திரசிகிச்சை முகக்கவசம், வெளியே ஒரு என் 95 முகக் கவசம் அணிவது போன்ற நடைமுறையும் ஏற்கத்தக்கது அல்ல.

நாம் அணிந்திருக்கும் ஒரு முகக் கவசம் முகத்தை மறைத்து நன்கு இறுக்கமாக உள்ளதா?, என்பதனையே உறுதி செய்ய வேண்டும். அவ்வாறு இறுக்கமாக இல்லை என உணர்ந்தால் மாத்திரம் வெளியே ஒரு துணி முகக் கவசத்தை அணியுங்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

# இணையவழிக் கற்பித்தல் இரண்டாவது நாளாகவும் புறக்கணிப்பு

(கொழும்பு)

ஜனநாயக வழியில் போராட்டம் நடத்திய இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் மீதான தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆசிரியர் தொழிற்சங்கங்கள் முன்னெடுத்து வரும் இணையவழி கற்பித்தல் புறக்கணிப்புப் போராட்டம் 2 ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் உள்ளிட்ட 14 தொழிற்சங்கங்கள் நேற்று முன்தினம் முதல் இணையவழி கற்பித்தல் நடவடிக்கைகளில் இருந்து விலகி தொழிற் சங்கப் போராட்டத்தினை முன்னெடுத்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதான செயலாளர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்த சந்தர்ப்பத்தில், தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட பலர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர், தனிமைப்படுத்தப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த தொழிற்சங்க போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தங்களது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை இந்த தொழிற்சங்கப்போராட்டம் முன்னெடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (நி-5)

# இலவசக்கல்வியை இராணுவமயமாக்க ஒருபோதும் அனுமதிக்க முடியாது

(நுவரெலியா)

இலவசக் கல்வியை இராணுவமயப்படுத்துவதற்கு ஒருபோதும் அனுமதிக்க முடியாதென இலங்கை ஆசிரியர் சங்கத்தின் நுவரெலியா மாவட்ட இணைப்பாளர் வேலு இந்திரச்செல்வன் தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறியுள்ளதாவது, "இலவசக் கல்வியின் உரிமையைப் பாதுகாப்பதற்காக நாம் தொடர்ந்து குரல் எழுப்பி வந்திருக்கின்றோம்.

இந்நிலையில் இலவசக் கல்வியை தனியார் மற்றும் இராணுவமயப்படுத்துவதற்கு ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

மேலும் இத்தகைய செயற்பாட்டுகளுக்கு எதிராக கல்விச் சமூகம் தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுக்கும்.

இதேவேளை தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட தொழிற்சங்க தலைவர்களை உடனடியாக விடுதலை செய்ய அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்" என அவர் தெரிவித்தார். (நி-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2353

### நிரோசன்

ரிவியில சனல் மாத்தாம ஒரே சனல ரொம்ப நேரம் பார்த்துட்டு இருந்தா....



ஒன்று ரிமோட் சரியில்லாம இருக்கனும் இல்ல மனசு சரியில்லாம இருக்கனும்

### கயல்விழி

என்னங்க கொரோனாவோடவே வாழப் பழகிட்டோம்




ஒரு புள்ளைய பாத்துக் கட்டி வைச்சா வாழ மாட்டோமா?

### கலையரசன்

மின் வெட்டின் போது...




### மகேசன்




### நித்திரா

தோசை மாவு வாங்கப் போன என் வீட்டுக்காரரை ஒரு வாரமா காணல மேடம்



ஒரு வாரமா என்னம்மா செஞ்சிட்டு இருந்தே, உப்புமா, பூரின்னு சாப்பிட்டு சமாளிக்கிறேன் மேடம்

### கயன்

பிரிட்ஜ் வாங்கும் போது என்ன சொன்னாய்? பழரசம் செஞ்சு வைப்பேன்...நீங்க எடுத்துக் குடிக்கலாம்னு சொன்னியா இல்லையா?



ஆமாங்க...
சும்மா நடிக்காதே...இப்ப பாரு பழைய ரசத்தைத் தவிர வேற ஒன்றும் இல்லை...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 200 கிலோ...

அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட இரணைப்பாலை பகுதியில் நிலத்தில் புதையுண்டு வெடிக்காத நிலையில் காணப்பட்ட ஆட்லரி ஷெல் ஒன்றே இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறித்த வெடிபொருளை மீட்பதற்கு பொலிஸார் நீதிமன்ற அனுமதியை கோரியுள்ளனர்.

இறுதி யுத்தத்தின்போது கைவிடப்பட்ட ஆட்லரி ஷெல் ஒன்றே இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-3)

## 41 பேர்...

மேலும் 41 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 3,574 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## வர்த்தக நிலைய...

குழுவொன்று வாளால் வெட்டி படுகாயப்படுத்திவிட்டு தப்பித்துச் சென்றுள்ளது.

இதில் 39 வயதான வர்த்தக நிலைய உரிமையாளர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,30)

## +1,404...

இதனையடுத்து, நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 277, 510 ஆக அதிகரித்துள்ளது (ம-3)

## சட்டம், ஒழுங்கை...

வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெகத் பளிகக்கார தெரிவித்தார்.

அத்தோடு யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களில் ஏற்கெனவே கடமையாற்றியுள்ளதால் வடக்கு மக்களின் மனங்களை நன்கறிவேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

காங்கேசன்துறையில் உள்ள வட மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத்தில் நேற்றுக் காலை கடமைகளை பொறுப்பேற்ற பின்னர் ஊடகங்களிடம் கருத்துரைத்தபோதே வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெகத் பளிகக்கார இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நான் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ள இந்த வேளையில் கோவிட்-19 நோய்த்தொற்று பரவல் காலப்பகுதியாக அமைந்துள்ளது. அதனால் மக்களின் தேவைகளை அறிந்து உயரிய சேவையை வழங்க என்னால் முடிந்த அனைத்தையும் செய்வேன்.

வடக்கு மக்களின் மனங்களை நன்கறிந்த நான் சட்டம் ஒழுங்கை உரிய வகையில் நடைமுறைப்படுத்தி மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பேன்" என்றார். (ம-3,33)

## யாழில் 6 ஆயிர...

யாழ்.மாவட்டச் செயலகத்தில் வைத்து நேற்றுச் செவ்வாய்க்கிழமை ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் இதுவரை 107 பேர் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்துள்ளனர்.

மேலும் மாவட்டத்தில் தற்போது மூவாயிரத்து 604 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 603 நபர்கள் சுயதனிமைப் படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (ம-3,18,33)

## வவுனியா பல்...

வளாகத்தின் முதல்வர் கலாநிதி த. மங்களேஸ்வரன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வளாகமாக இயங்கி வந்த "யாழ்ப்பாண பல்கலைக்கழக வவுனியா வளாகம்" எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் "வவுனியா பல்கலைக்கழகம்" எனத் தரமுயரும் என கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸினால் கடந்த மாதம் அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி, இலங்கை வவுனியா பல்கலைக்கழகத்தைத் ஸ்தாபிப்பதற்கான முன்னேற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அதன் ஒரு நிலையாக யாழ்ப்பாண பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் முதல்வர் கலாநிதி த. மங்களேஸ்வரன் முதலாவது துணைவேந்தராக நியமிக்கப்பட்டுள்ளார். (ம-3)

## பெரும்பான்மை...

வரும் நிலையில், பதவியை பெறுவதற்கான போட்டிகளும் சூடு பிடித்திருக்கின்றது.

இந்நிலையில் வடக்கிற்கான புதிய ஆளுநராக லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன நியமிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக கொழும்பு மட்டத்தில் பேச்சுகள் இடம்பெறுவதாக கூறப்படுகின்றது.

இது தொடர்பான உத்தியோகபூர்வமான அறிவிப்பு விரைவில் வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-3)

## பரீட்சைகள்...

படும் என அறிவிக்கப்பட்டுள்ளது,

இந்த விடயத்தை கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நெலும் மாவத்தையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், யாருக்கும் எவ்விதமான அநீதிகளையும் இழைக்காது பரீட்சை நடத்துவது குறித்து தீர்மானம் எடுக்கப்படும் என சுட்டிக்காட்டியுள்ளார். (ம-3)

## ஒடுக்குவது...

சிங்கள நாளிதழ் ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த தீர்மானம்மிக்க தருணத்தில் மருத்துவ நிபுணர்களின் ஆலோசனை வழிகாட்டல்களுக்கு அமைய நட்வடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திருமணம், மரணச் சடங்கு போன்ற மிகவும் இன்றியமையாத மனிதாபிமான தேவைகளின்போதுகூட மக்கள் ஒன்று கூடுவது வரையறுக்கப்பட்டுள்ளது.

வெசாக், ஈஸ்டர் போன்ற நிகழ்வுகளின்போது மக்கள் ஒன்றுகூட அனுமதிக்கப்படவில்லை. இது அடக்குமுறை கிடையாது.

போராட்டங்கள் நடத்துவது மக்களின் உரிமை என்பதில் தமக்கு எவ்வித மாற்றுக் கருத்தும் கிடையாது.

அதற்காக ஜனாதிபதி செயலகத்திற்கு அருகாமையிலேயே ஓர் இடத்தை ஒதுக்கிக் கொடுத்த ஒரே ஜனாதிபதி நானே. நல்லாட்சி அரசாங்க காலத்தில் மக்கள் போராட்டங்களை நடத்தியபோது தாக்கப்பட்டனர். தற்போது அவ்வாறான ஓர் நிலைமை கிடையாது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில் அதிக எண்ணிக்கையிலானவர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படும். அவ்வாறு ஏற்றப்பட்டதன் பின் நாடு முழுமையாக திறக்கப்படும்.

இந்த விடயம் தொடர்பில் தெளிவுடைய தொழிற்சங்கங்கள் போராட்டங்களை முன்னெடுத்து நாட்டை திறப்பதனை காலம் தாழ்த்த முயற்சிப்பதாக ஜனாதிபதி குற்றம சுமத்தினார். (ம-3)

## அமெரி...

இந்த சந்திப்பிற்கான அழைப்பை விடுத்திருந்த போதும், இரா. சம்பந்தன் நடமாட முடியாத நிலைமைக்குள்ளாகியுள்ளதால், அவரது வீட்டிலேயே இச்சந்திப்பு இடம்பெறும்.

இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருக்கு அமெரிக்க தூதரகம் அழைப்பு விடுத்துள்ளது. (ம-3)

## ஊடகங்களுக்கு...

ரிக்கும் ஊடகங்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் நேற்று அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் ஊடக நிறுவனங்கள் மீது அடக்குமுறைகளை பிரயோகிக்கும் எவ்வித திட்டமும் அரசாங்கத்திற்கு கிடையாது. எவ்வாறெனினும், நாட்டின் சமாதானத்தை சீர்குலைக்கவும், இன ஐக்கியத்தில் விரிசலை ஏற்படுத்தவும், விடுதலைப் புலிகளை போற்றும் வகையிலும் செயற்படும் ஊடகங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்கம் எல்லா சந்தர்ப்பங்களிலும் சட்டத்தின் அடிப்படையிலேயே செயற்படும். எதிர்க் கட்சிகள் குற்றம் சாட்டுவதனை போன்று சட்டத்தரணிகளை அழைத்து எந்தவொரு ஊடக நிறுவனத்திற்கு எதிராகவும் இரகசிய திட்டங்களை தீட்டவில்லை.

நாட்டின் அரசியல் அமைப்பிற்கு அமைவாக சட்ட திட்டங்களின் அடிப்படையிலேயே எந்தவொரு நிறுவனத்திற்கு எதிராகவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-3)

## ராஜபக்ஷ...

பாதுகாப்புக்கும் தேசிய பொருளாதாரத்துக்கும் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது."

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க குற்றஞ் சாட்டினார்.

மக்கள் விடுதலை முன்னணியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று கட்சித் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ம-3)

மெகா பவர்
திகதி 13/07/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0852
வெற்றி எழுத்து F சுப்பர் இலக்க 18 வெற்றி இலக்கங்கள் 16 46 51 76

மஹஜன சம்பத
திகதி 2021/07/13
சீட்டிழுப்பு இலக்கம் 4504
ஆங்கில எழுத்து B வெல்லப்பட்ட இலக்கங்கள் 5 9 0 2 6 5
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 13.07.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2799
ஆங்கில எழுத்து H வெற்றி இலக்கங்கள் 08 19 35 63
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2021.07.13
சீட்டிழுப்பு இலக்கம் - 534
H 12 34 45 60
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4334
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1307
வர்ணம் : இள நீலம்
சீட்டிழுப்பு திகதி: 13.07.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 135,629,247
வெற்றி இலக்கங்கள் 03 12 37 72 ஆங்கில எழுத்து Z
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
கிழமை: செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 3642
வர்ணம் : இள நீலம்
சீட்டிழுப்பு திகதி: 13.07.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 42,999,384
வெற்றி இலக்கங்கள் 02 36 47 74 ஆங்கில எழுத்து W
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் 4,301,607/=
திகதி : 13.07.2021
வெற்றி வாரம் : 3193
வர்ணம் : சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 27 45 61 62 தனுசு
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,445,740/=

SUPER BALL சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம் 1481 நிறம் இளம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 13/07/2021 தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் Y 16 32 36 47
அடுத்த சுப்பர் ஜக்பொட் 58,357,110/=
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நான் அரசியல்வாதி அல்ல நிர்வாக அதிகாரி

# சுற்றுநிருபங்களுக்கு அமையவே என்னால் செயற்படமுடியும்

## வீட்டுத் திட்டம் தொடர்பில் யாழ். மாவட்ட அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

நான் ஒரு நிர்வாக அதிகாரி ஆகையால் நடைமுறைப்படுத்தப்படும் சுற்றுநிருபங்களுக்கு அமையவே என்னால் செயற்பட முடியும் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் வீட்டுத் திட்டங்கள் சுற்றுநிருபங்களுக்கு அமையவே நடைமுறைப்படுத்தப்படுகிறது.

வீட்டு திட்டங்களுக்கான தெரிவுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கடந்த 12.03.2021, 24.04.2021, 11.05.2021, 19.05.2021, 03.07.2021 ஆகிய திகதிகளில் தெளிவான சுற்றறிக்கைகள் மூலம் பிரதேச செயலாளர்களுக்கு அறி வுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

வீட்டுத்திட்ட பயனாளிகள் தெரிவு தொடர்பில் ஏற்கனவே பிரதேச செயலகங்களில் காட்சிப்படுத்தல்கள் இடம்பெற்றது.

ஏனெனில் மக்கள் தமது தெரிவுகள் தொடர்பில் அறிந்து கொள்வதற்காக இவ்வாறான நடைமுறை பின்பற்றப்பட்டது.

அதன் பின்னர் சில பிரதேச செயலகங்களில் இருந்து தமது பெயர்கள் நீக்கப்பட்டதாகவும், தாம் தெரிவு செய்யப்படக்கூடிய தகுதி உள்ளவர்கள் என்றும் புறக்கணித்து விட்டார்கள் என முறைப்பாடுகள் எமக்குக் கிடைத்தன.

அதனடிப்படையில் புதிய சுற்றறிக்கை மூலம் நீக்கப்பட்டவர்கள் ஏன் நீக்கப்பட்டார்கள்? தெரிவு செய்யப்பட்டவர்கள் எவ்வாறு தெரிவு செய்யப்பட்டார்கள்? என புள்ளி அடிப்படைகளை தெளிவுபடுத்துமாறு பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

அதன்பின்னர் தெரிவு செய்யப்படும் பயனாளிகளின் இறுதிப் பட்டியல் எதிர்வரும் 19ஆம் திகதி காட்சிப்படுத்தப்படும்.

வீட்டுத்திட்டம் தொடர்பில் தற்போது எமக்குக் கிடைக்கும் பெரும்பாலான முறைப்பாடுகள் அனாமதேய முறைப்பாடுகளாகக் காணப்படுகின்றன.

எமது மாவட்டத்தில் 21 ஆயிரம் வீடுகளுக்கான தேவைப்பாடு காணப்படுகின்ற நிலையில் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான 1532 வீடுகளும்,6 இலட்சம் ரூபாய் பெறுமதியான 630 வீடுகளுக்கும் அனுமதி கிடைத்தது.

வீட்டத்திட்ட அடிக்கல் நாட்டுவது தொடர்பில் யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு தலைவருக்கு மட்டுமல்ல ஏனைய மாவட்ட இணைத்தலைவர்களுக்கும் ஜனாதிபதியால் வழங்கப்படுகின்ற பொதுவான நடைமுறைகளே காணப்படுகின்றன.

நான் மாவட்ட செயலாளர் என்ற வகையில் நிர்வாக ரீதியான நடைமுறைகளை மட்டும் செயற்படுத்த முடியுமே தவிர அரசியல் ரீதியாக செயற்பட முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (ம-03,33,104)

போட்டிப் பரீட்சை
Zoom
செயலி ஊடான
வகுப்புக்கள்
பின்வரும் அனைத்து பரீட்சைகளுக்குமான அனைத்துவினாத்தாள்களுக்குமுரியவகுப்புக்கள் நடைபெறுகின்றன.
தவசேகர் வளவாளர்குழு.
SLEAS, SLTES, GS, HealthM.A, MSO, Teaching, agrM.A, agr RDO, LL.B, S.M
(C-2349)
மேலதிகவிபரங்களுக்கு கீழ்தரப்படும் whats app இலக்கங்களில்ஒன்றுக்கு zoom class (exam name) எனதகவல்தரவும்.
T.P-0766883394
T.P-0770774569

# தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்றம் சென்ற

## ரணில், அத்துரலிய தேரரின் பதவிகளை பறிக்க மனு

(கொழும்பு)

தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் எங்கள் மக்கள் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர் ஆகியோரின் பதவிகளை பறிக்கும்படி உச்சநீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வினிவித முன்னணி என்ற கட்சியின் செயலாளரான சட்டத்தரணி நாகானந்த கொடிதுவக்கு நேற்று இந்த அடிப்படை மனித உரிமை மீறல் மனுவைத் தொடர்ந்துள்ளார்.

இலங்கையில் கட்சிகளால் தேசியப்பட்டியல் உறுப்பினர்களை பெயரிடும் செயற்பாடானது, கடந்த 2020ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 07ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் அந்தக் காலகட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் எங்கள் மக்கள் கட்சி ஆகியன தத்தமது தேசியப்பட்டியல் உறுப்பினர்கள் பெயரை ஆணைக்குழுவுக்கு அனுப்பத் தவறியதாக அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்துள்ள சட்டத்தரணி நாகானந்த கொடிதுவக்கு தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட காலகட்டத்திற்குள் தேசியப்பட்டியல் உறுப்பினர்களின் பெயர் விபரங்களை கையளிக்க இந்த இரண்டு கட்சிகளும் தவறியமையின் பின்னர் பிறிதொரு காலத்தில் பெயர்களை அறிவித்ததினால் அரசியலமைப்பு மீறப்பட்டிருப்பதாக சட்டத்தரணி கொடிதுவக்கு சுட்டிக்காட்டியுள்ளார். (ம-03)

# ஆசிரியர்களுக்கான தடுப்பூசி அடுத்த 10 நாட்களில் நிறைவு

## கல்வி அமைச்சர் ஜீ.எல் பீரிஸ்

(கொழும்பு)

பாடசாலை ஆசிரியர்களுக்கு தடுப்பூசி வழங்கும் பணிகள் 86 வீதம் நிறைவடைந்துள்ளதாக கூறியிருக்கும் கல்வியமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அடுத்த 10 நாட்களில் அனைத்து பணிகளும் நிறைவடையும் எனவும்4வாரங்களுக்குள்2ஆவது டோஸ் வழங்கப்படும் எனவும் கூறியுள்ளார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கொவிட் -19 வைரஸ் தாக்கத்தினால் மூடப்பட்டுள்ள பாடசாலைகளை விரைவாக திறக்க எதிர்பார்த்துள்ளோம். இணையவழி கல்வி வகுப்பறை கல்விக்கு நிகராக அமையாது. தொலை நோக்கு கல்வி முறைமை பிரச்சினைகளுக்கு தற்காலிக தீர்வை மாத்திரம் வழங்கும்.

அத்துடன் பாடசாலை வெளிகள ஊழியர்களுக்கும் கொவிட்-19 தடுப்பூசிவழங்கப்படும்என்றார். (ம-3)

அண்ணா EXPRESS Courier Services
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/=
070 3305500
077 888 9388
(C-2308)
976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்
சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை
பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை
மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1000/=Kg
எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி
(C-2307)
0768226240 DHL

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(7216)

கனடா-STUDENT VISA
A/L எடுத்த மாணவர்கள் குறைந்த செலவில் கனடாவில் கல்வி கற்க இலவச ஆலோசனைகள்/அனுமதிகள் மற்றும் விசா ஏற்பாடுகள். (C-2307)
VISA APPLICATION
IELTS இலவசமாக கற்பிக்கப்படும் (நிபந்தனைக்குட்பட்டது)
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
0777-068-777

Vacancy
Telephone operator - Female (Part time/Full time), Mechanic, Sales man, Sales girl.
(7214)
074 138 3368

❖ இரும்புப் பெட்டி விற்பனைக்கு உண்டு.
❖ வீட்டுத் துப்புரவுப் பணிக்கு நிரந்தரமாக வேலையாள் தேவை. (7219)
☎-077 773 0567

காணி விற்பனை
யாழ்ப்பாணம், ஆறுகால்மடத்தில் முதலாம் ஒழுங்கையில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு.
( 2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.)
1 பரப்பின் விலை 6 இலட்சம் மட்டும்
( யாழ். - மானிப்பாய் பிரதான வீதியில் இருந்து 100 m தூரத்தில்)
(7220)
076 221 2037
076 734 1023
077 064 2661

வேலை வாய்ப்புக்கான தேர்வு...
அரசினால் அங்கீகரிக்கப்பட்ட எமது நிறுவனத்தில் பணி புரிவதற்கான ஓர் அரிய வாய்ப்பு...
❖ Clerk ❖ Assistant Manager
❖ Administrative ❖ Stock Reporter
❖ Supervisor ❖ Electric Repairing
ஆகிய பதவிகளுக்கு வரையறுக்கப்பட்ட நபர்களை இணைக்கவுள்ளோம். நீங்கள் 18 வயதிற்கும் 40 வயதிற்கும் உட்பட்டவராகவும் O/L, A/L படித்த திறமைசாலியாகவும் இருப்பவரா?
நிரந்தர வேலை வாய்ப்பு
பயிற்சி காலத்தின்போது மாத வருமானம் 15,200-32,500 வரையும். வெளி மாவட்டத்தில் இருந்து வரும் வேலையாட்களுக்கு தங்குமிட வசதி மற்றும் இரவு உணவு இலவசமாக ஒழுங்கு செய்து தரப்படும்.
மேலதிகமான தொடர்புகளுக்கு
கிளிநொச்சி
077 940 8007
076 212 1409
(7201)
யாழ்ப்பாணம்
077 517 9034
076 653 4024
021 722 3317

Online Jobs
Online மூலம் பகுதி நேரமாக அதிக வருமானம் பெறுவது எப்படி? இன்றே எமது வழிகாட்டல் வகுப்புக்களில் கலந்து கொள்ளுங்கள்.
• Data Entry • Video watching
• Copy paste • Typing
• Ads click
விண்ணப்ப முடிவு திகதி
21.07.2021 (7213)
Winstar Consultants (Pvt) Ltd
No- 45, Vembadi Street, Jaffna.
021 493 0990
071 071 6979

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org